(8)

# சிங்கள மொழித் தேர்ச்சிபெற முயற்சிக்காத ஊழியருக்கும அவகாசம்!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 203
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆவணி 17 ஜமா. ஆகிர் 30 புதன்கிழமை (2-9-70)




பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

அன்டன்
வாளிகள்
அளவுகள் 7'' முதல் 14'' வரை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7130

## பேராதனை பொறி இயல் பகுதிக்கு

# 35 மாணவர்களை மேலதிகமாக அனுமதிக்க அமைச்சர் உத்தரவு

## பரீட்சை பாகுபாடு பற்றிய புகார் மீது நடவடிக்கை

கொழும்பு, செவ்வாய்
பொறியியல் பகுதிக்கு 35 மாணவர்களை மேலும் கூடுதலாக அனுமதிக்குமாறு கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூத் பேராதனை பல்கலைக்கழகப் பொறியியல் பகுதிக்கு உத்தரவிட்டுள்ளார்.

இப்பகுதிக்கு முன்னர் 155 மாணவர்களே அ[illegible]திக்கப்பட்டிருந்தனர். இப்பொழுது இம்மாணவர்களோடு மேலும் 35 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் 35 பேரும் சிங்கள மாணவராவர்.

சிங்கள மாணவர்களுக்குப் பாகுபாடு காட்டப்பட்டுள்ளதாக புகார் தெரிவித்து கல்வியமைச்சரைப் பலர் பேட்டி கண்டனர். கடந்த வார இறுதியில் ஒரு தூது கோஷ்டியொன்று அமைச்சரைக் கண்டு பேச்சுவார்த்தை நடாத்தியது. இதன் பலனாகவே அமைச்சர் மேற்படியுத்தரவை பொறியியல் பிரிவிற்கு பிறப்பித்துள்ளதாகத் தெரியவருகிறது.

ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட 155 மாணவர்களில் 117 பே[illegible]மிழ் மாணவர்களாவர். இ[illegible]தவேளையில் நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கும் மற்றும் உயர் கல்வி [illegible]றுவனங்களுக்கும் மாணவர்களைத் தெரிவு செய்யும்பொழுது இனவிகிதாசாரப்படி தெரிவுசெய்யுமாறு கல்வியமைச்சுக்குக் கோரிக்கைகள் கிடைத்துள்ளன. (சிபிஏ)



## 'என்சிந்தனையெல்லாம் தமிழர் பற்றித்தான்'

### வடபகுதி ல சு.க. அமைப்பாளர் உரை

உடுப்பிட்டி, செவ்வாய்
''என் அறிவுக்கெட்டிய வரை கட்சியைப் பற்றியன்றித்தமிழினத்தின் தேவை என்ன விமோசனம் பெற வழியென்ன என்பதுபற்றி சிந்தித்து வருகின்றேன் சுதந்திரக்கட்சி சிறுபான்மைத்தமிழர்களுக்குப் பல உதவிகள் செய்து வருகின்றது. ஒரு சிறுபான்மைத் தமிழரையும் நியமன எம். பியாக நியமித்துள்ளோம் இதனால் பிளவுகள் ஏற்பட்டிருந்தாலும் சிறுபான்மைச் சமூகத்தவர்களுர்கு இப்பதவி மூலம் கௌரவமளித் தோட்டத்தில் நடைபெற்ற இவ் அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு திரு. ஜே. எஸ். வேலும்பிள்ளை தலைமை வகித்தார்.

திரு. துரைராஜா மேலும் பேசியதாவது:

''சமுகத்தில் நிலவும் குறைபாடுகளை ஒழிப்பதற்காகக் காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவே சட்டம் கொண்டுவந்தார். சேர். பொன். இராமநாதன் போன்ற தலைவர்கள் தேசியகாங்கிரஸ் மூலம் தேசியரீதியில் கடமையாற்றி தமிழ் சிங்கள மக்

## வடக்கிலும் கிழக்கிலும்

# 20 கிராமங்களுக்கு

மாணவ[illegible]க்கு

## தனித்தனி விண்ணப்பஞ் செய்யும்படி அறிவிப்பு

கொழும்பு, செவ்,
**சிங்கள மொழியில் தேர்ச்சிபெற இதுவரை ஒரு தடவையாவது முயற்சிக்காத அரசாங்க ஊழியர்களுக்கு மேலும் அவகாசம்வழங்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.**

இதற்கு முன்னேடியாக அவர்களின் விபரங்களைச் சேகரிக்குமாறு உள்ளூராட்சி பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தமது இலாகாவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சிங்களமொழியில் தேர்ச்சி பெற முயற்சிசெய்யாத ஊழியர்களை தனித்தனி விண்ணப்பிக்கும்படி அமைச்சர் அறிவித்துள்ளார். இவர்களின் விண்ணப்பங்களை தனித்தனி ஆராய்ந்து சலுகைகள் வழங்கப்படும் என்று அமைச்சர் கூறியுள்ளார்.

சிங்களமொழியில் தேர்ச்சி பெற முயற்சித்து, சித்தி அடையாத ஊழியர்களுக்கும் இந்தச் சலுகை வழங்கப்படும் என்றும், தேர்ச்சி பெற முயற்சித்தவர்களையும், முயற்சிக்காதவர்களையும் தனித்தனியாக விண்ணப்பிக்கும்படியும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

— —

## 3 மாதத்தில் பிரச்னை தீருமா?

கம்பஹா, செவ்வாய்
''பதவிக்குவந்து மூன்று மாதங்களுக்குள் மக்களின் சகல பிரச்னைகளையும் தீர்த்து வைக்க உலகத்தில் எந்த அரசாங்கத்தினாலும் முடியாது. இப்பொழுது சில இளைஞர்கள் சேகுவேரா என்றொரு இயக்கத்தை ஆரம்பித்துக் கொண்டிருக்கிறார்கள் இந்த இயக்கங்களால் பொது மக்கள் ஏமாற்ற முற வேண்டாம்.''

இவ்வாறு பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கம்பஹாவில் இடம்பெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினார். பாலம் ஒன்றை பிரதம மந்திரி திறந்து வைத்து உரை நிகழ்த்தினார்.

பல ஆண்டுகளாக மக்கள் மத்தியில் மலிந்து கிடக்கும் பிரச்னைகளை ஒரு மூன்று மாதங்களில் தீர்த்து வைப்பது சுலபமல்ல. அதேசமயம் மக்களுக்கு நாம் ஏற்கனவே

(4-ம் பக்கம் பார்க்க)

## மகாஜன சம்பத முடிவுகள்

கொழும்பு, புதன்
நேற்று இழுக்கப்பட்ட 18-வது மகாஜன சம்பத முதல்மூன்று சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
25 K 000667 ரூ. 74,300

இரண்டாவதுபரிசு
02 K 000766 ரூ. 74,300

மூன்றுவது பரிசு
24 F 000372 ரூ 74,300

## 14,500 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பேன்

--மைத்திரி

கொழும்பு, செவ்வாய்
ஆகக்குறைந்தது 14,500 இளைஞர்களுக்கு எனது அமைச்சின் கீழுள்ள இலாகாக்களில் ஒரு வருடத்தில் வேலைவாய்ப்பளிப்பேன்.

தனது இலாகாக்களின் தொழிலாளர்களதுதொழிற் சங்கத் தலைவர்களைச் சந்தித்து உரையாற்றுகையில் நீர்ப்பாசன, மின்சாரநெடுஞ் கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சின் புதிய பிரதேச ஒருமுக சேவையை தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கு விளக்கிக் கூறவே அமைச்சர் அவர்களை அழைத்து உரையாற்றினர்.

அமைச்சில் ஏற்பட்டஇந்த மாற்றத்தினால் ஊழியர்களுக்கு ஒருவிதமான கஷ்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரையும் நியமன எம். பியாக நியமித்துள்ளோம் இதனல் பிளவுகள் ஏற்பட்டிருந்தாலும் சிறுபான்மைச் சமூகத்தவர்களுக்கு இப் பதவி மூலம் கௌரவமளித்துள்ளோம்''

மேற்கண்டவாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வடபகுதி அமைப்பாளரும் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன டைரக்டருமான திரு எம். துரைராசா கரவெட்டியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளையை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் சுட்டிக் காட்டினர்.

கரவெட்டி கிழக்கு கிழவி ...வே சட்டம் கொண்டுவந்தார். சேர். பொன். இராமநாதன் போன்ற தலைவர்கள் தேசியகாங்கிரஸ் மூலம் தேசியரீதியில் கடமையாற்றி தமிழ் சிங்கள மக்களை ஒன்றுபடுத்தி இலங்கை சுதந்திரம் பெறப்பாடுபட்டனர். இதேசமயம் இத்தலைவர்கள் தமிழ்பண்பாடு, சமயவளர்ச்சிக்காகவும் உழைத்தனர். மொழிதான் அரசியல் அல்ல பாதைக்காக வாக்களிப்பதால் எவ்விதமுன்னேற்றமுமில்லை''

திருவாளர்கள் என். கணேச சிங்கராசா, பொ. கந்தப்பு மணிசுந்தரம், சிவஞானசுந்தரம் ஆகியோரும் பேசினர்.

## வவனியா கொலைவழக்கு

# எதிரி நன்னடத்தை பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், செவ். வவனியா கொலைவழக்கில் இறந்தவரின் மனைவிக்கு மூன்றுவருடத்திற்கு மாதம் 50 ரூபா வீதம் எதிரி கட்ட வேண்டும் என்று நீதியரசர் உத்தரவிட்டார். எதிரி 2500 ரூபா பொறுப்பில் 3 வருடத்திற்கு நன்னடத்தை பிணையில் செல்லும்படியும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது.

இவ்வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் வவனியாவில் 70-ம் ஆண்டு ஜனவரி 15ம் தேதிவல்லிபுரம் இரத்தினம் என்பவரை பழனி குமாரசாமி என்பவர் கொலைசெய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி கைமோசக் கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

எதிரி சார்பில் அட்வகேட் வி என் நவரத்தினம். புறக்டர் என் அருணசலத்தின் அனுசரணையுடன் ஆஜராஞர் எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் ஏ விஸ்வநாதன் நியமிக்கப்பட்டிருந்தார்,

## "ஈழத்து எழுத்தாளரின்

# ரூ. 6 லட்சம் நூல்கள்

## அலுமாரியில் தூங்குகின்றன"

உடுப்பிட்டி செவ்வாய் "தமிழகக்குப்பை இலக்கியங்களைத் தடை செய்ய வேண்டுமென்ற ஒருபரபரப்பான கருத்துப்போராட்டம் எம்மிடையே ஏற்பட்டுள்ளது. அமைச்சர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைநடாத்துவதால் மட்டும் இலக்கியத்தை வளர்க்கமுடியாது. சென்ற 20 வருடங்களாக நாம் இவ்வியக்கத்தை நடாத்தி வருகின்ரேம் தரமற்ற சாக்கடைக்குப்பைப் பத்திரிகைகளை இறக்குமதி செய்வதையே நாம் எதிர்க்கின்ரேம்."

இவ்வாறு திரு. டொமினிக் ஜீவா நெல்லியடி கொட்டில் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையிலுள்ள மண்டபத்தில் நடைபெற்ற இலக்கியக்குழுக் கூட்டத்தில் குறிப்பிட்டார் திரு டொமினிக்ஜீவா மேலும் பேசுகையில் 'ஈழத்து எழுத்தாளர்களின் 600 புத்தகங்கள் ஆறுலட்சம் ரூபா செலவில் வெளியிடப்பட்டும்ஆதரிப்பாரின்றி அலமாரிகளில் தூங்குகின்றன' என்ருர்

'இலக்கிய ஊடுருவல் செய்வது தவருனது தமிழகத்தில் உண்மையான கலைஞனுக்கு வாழவழியில்லை 40 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தவர்கள் பாராட்டினுலேதமிழகக் கலைஞர்கள் பெருமையெனக் கருதிய காலமும் இருந்தது இன்று இந்த நிலைமைமாறிவிட்டது' எனஅவர் சொன்னர்

இக்கூட்டத்திற்கு நெல்லை க. பேரன் தலைமை வகித்தார் 'எம்மிடையே விழிப்

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கிலும் கிழக்கிலும்

# 20 கிராமங்களுக்கு விரைவில் மின்சாரம்

கொழும்பு, செவ்வாய் வடக்குக்கிழக்கு மாகாணங்களிலுள்ள இருபது கிராமங்களுக்கு விரைவில் மின்சாரவசதி செய்து கொடுக்கப்படவிருக்கிறது

மின்சார சபையின் கிராம மின்சார விநியோகத் திட்டத்தின் கீழ் மேற்படி வசதியளிக்கப்படவிருக்கிறது. விரைவில் மின்சாரத்தைப் பெறவிருக்கும் கிராமங்களின் பெயர்கள் பின்வருமாறு: ஊர்காவற்றுறைத் தொகுதி-கரம்பன், வட்டுக்கோட்டைத் தொகுதி- அராலி மேற்கு, அராலி தெற்கு; காங்கேசன்துறை- கொல்லன்கலட்டி; உடுவில்- குப்பிளான்; கோப்பாய்- நவக்கிரி, கதிரிப்பாய், ஊரெழு; பருத்தித்துறைத் தொகுதி- பொலிகண்டி; சாவகச்சேரித் தொகுதி- சரசாலை, மீசாலை; கிளிநொச்சித் தொகுதி- குமாரபுரம், முரசுமோட்டை 2ம், 3ம் பிரவுகள்; மட்டக்களப்புத் தொகுதி- தலன்குடா, கோவில்குளம்; பட்டிருப்பு தொகுதி-செட்டிதீவு, கந்து தலாவகா, எருவில், பட்டிருப்பு.

(சி. பி ஏ)

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கும் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கும்

## மாணவருக்கு எச்சரிக்கை

நல்லூர் புதன்

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரி அதிபருக்கும் மற்றும் விரிவுரையாளர் சிலருக்கும் அவர்கள் உடை மற்றும் அவர்களைப்பற்றிய வர்ணனைகளைத் தெரிவித்து அனமதேயகடிதம் எழுதியதாகக் கருதப்பட்ட எட்டு மாணவர்கள் ரகசியப் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டனர்,

இவர்கள் அவர்களுடைய பெற்றோர்களுடன் வடபகுதிப் பொலிஸ் அதிபர் முன்னையில் அழைக்கப்பட்டு எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

# 'தனித் தமிழ்நாடு சரிவராது சமஷ்டிதான் பொருத்தம்'

## கருத்தரங்கில் எஸ். ஜே. வி.

மாவிட்டபுரம், செவ்வாய் "தமிழர்களின் இன்றைய இக்கட்டான நிலையில் தனித் தமிழ் நாடு கோருவது ஒத்துவராது சமஷ்டி முறைதான் தமிழ் மக்களின் சுதந்திரம் வாழ்வுக்கு ஏற்றது. இதற்காகவே தமிழரசுக்கட்சி கடந்த 20வருடங்களாக போராடிவந்தது. தொடர்ந்தும் இதற்காகவே போராடிக்கொண்டிருக்கும்''

இவ்வாறு தமிழரசுத் தலைவரும் காங்கேசன்துறை எம். பியுமான திரு எஸ் ஜே வி. செல்வநாயகம் கட்டுவன் தெற்கு பாரதி சனசமூக நிலைய 11-வது ஆண்டு விழாவில் கலந்துரையாற்றுகையில் கூறினர்.


மயிலிட்டி கிராமசபை அங்கத்தவர் திரு ஆ. தருமலிங்கம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்:

தற்போதுள்ள ஒற்றை ஆட்சி முறையால் தமிழ் மக்கள் ஒருபோதும் சுதந்திரம் பெறமுடியாது ஆகவே சமஷ்டி ஆட்சி மூலம் தான் சுதந்திரமாக வாழலாம் அதற்காக தமிழ்மக்கள் ஒன்றிணைந்து சமஷ்டி அரசியலை ஏற்படுத்த போராடவேண்டும்" என்ருர்.

திரு. க. ஸ்ரீபாஸ்கரன் பேசுகையில் இந்தியாவின் சுதந்திர வேட்கைக்காக பாரதி தீர்க்க தரிசனத்துடன் கவிதைகளையாத்து சுதந்திர வீறை மக்களிடையே ஏற்படுத்தி இந்தியாவை ஒரு சுதந்திர நாடாக திகழ செய்தாரோ அதேபோல நமது அரசியல்தலைவர்களும் இலங்கை சுதந்திரமடைந்த போதும், தமிழர்கள் அடிமையாக வாழாது சுதந்திரத்துடன் வாழவேண்டுமென்பதற்காக பல போராட்டங்களையும் கொள்கைகளையும் முன்வைத்து உழைத்துவந்தனர். இன்றைய நிலையில் இதுகாலம்வரை நாம் மேற்கொண்ட கொள்கைகள் பயனளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சோஷலிசம் என்று பேசிக்கொண்டு வகுப்புவாதத்தை வளர்த்து வரும் இந்நேரத்தில் தமிழ் மக்கள் சுபீட்சமான பாதையில் செல்லவும் சுதந்திரத்துடன் வாழவும்தனித்தமிழ் நாடு கோருவதுதான் சரியான வழி ஒரு பெரும்பான்மை இனத்தின்கீழ் எத்தனைவருடங்கள் தான் நாம் அடிமைகளாக வாழ்வது தொடர்ந்தும் நாம் அடிமைகளாக வாழாது சுதந்திரத்துடன் வாழவேண்டுமானல் தனித்தமிழ் நாடு பெறுவதற்காக போராடதயாராக வேண்டும்,

65-ம் ஆண்டு தமிழ்க்காங்கிரஸ்சார்பில் காங்கேசன் துறை தொகுதியில்போட்டியிட்டபோது வடக்கு விவசாயிகள் விவசாயத்தில் முன்னேற மகாவலிகங்கை வடக்கே திருப்பப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்தேன் அப்போதுஎமது எதிர்க்கட்சியின் மகாவலி கங்கையை போத்தலிலா கொண்டு வருவதுஎன்றுஎன்னைப்பார்த்து கேலி செய்தனர். ஆனல் நாம் கூறியபடி இன்று மகாவலிகங்கை வடக்கே திருப்பப்பட இருக்கிறது இதைத் திருப்பும் திட்டம் தமிழர்களுக்கு பயனற்ற திட்டமாகஅமைந்துள்ளது. தமிழ் மக்கள் வெங்காயம், மிளகாய் போன்ற உப உணவு பயிர்களைச் செய்தே பெரும்பாலும் தமது வாழ்க்கையை நடத்தி வருகிருர்கள். மகாவலிகங்கை 30 வருடங்களின் பின் தான் வடக்குக்குவரும் என தெரிவிக்கப்படுகிறது இப்படி மகாவலி கங்கைபடிப்படியாக திருப்ப அரசுமுனைந்துள்ளதால் முதலில் மகாவலி அடிவாரத்திலுள்ள சிங்கள விவசாயிகள் வெங்காயம், மிளகாய் போன்றபயிர்களை செய்து பயனடைவார்கள் 30 வருடத்தின் பின் இங்குவரும்போது சிங்கள மக்கள் உபஉணவு பயிர்களில் முன்னேற்றம் அடைந்து விடுவார்கள் இப்படியானல் நமது விவசாயி

(4-ம்பக்கம் பார்க்க)



...வேலைவாய்ப்பளிப்பேன்.

தனது இலாகாக்களின் தொழிலாளர்களதுதொழிற் சங்கத் தலைவர்களைச் சந்தித்து உரையாற்றுகையில் நீர்ப்பாசன, மின்சாரநெடுஞ்சாலை அமைச்சர் திரு மைத்திரிபாலசேனநாயக்கா மேற்...சர் அவர்களை அழைத்து உரையாற்றினர்.

அமைச்சில் ஏற்பட்டஇந்த மாற்றத்தினல் ஊழியர்களுக்கு ஒருவிதமான கஷ்டமும் ஏற்படாது எனவும் திரு சேனநாயக்கா தொழிற்சங்க பிரதிநிதிகளுக்குத் தெரிவித்துள்ளார்

(சி. பி, ஏ)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் மலேரியா பயம் இல்லை

## சிங்களபத்திரிகைச்செய்திக்கு மறுப்பு

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது மலேரியாவால் பாதிக்கப்படுவோர் தொகை வெகுவாகக் குறைந்துகொண்டுவருகிறது இவ்வாண்டு பெப்ரவரியில் இருந்து ஆகஸ்ட் மாதம் வரை தினம் மலேரியாவால் பாதிக்கப்பட்ட சுமார் 50 பேர் வரைதான் ஆஸ்பத்திரிக்கு வந்து சிகிச்சை பெறுகிருர்கள்.

யாழ்ப்பாணத்தில் மலேரியா நோயினல் அதிகமானேர் பாதிக்கப்படுகிருர்கள் எனச் சிங்கள தினசரி ஒன்றில் வெளியான செய்தி சம்பந்தமாக கேட்டபோது யாழ் வைத்திய அதிகாரி ஒருவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் இதுசம்பந்தமாகக் கருத்துத் தெரிவிக்கையில் பயப்படத்தக்க அளவுக்கு யாழ்ப்பாணத்தில் மலேரியா நோய் பரவவில்லையென்றும் மலேரியாவை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருவதாகவும் சொன்னர்.

ஜனவரி மாதத்துக்கு முன்னர் நிலைமை மோசமாக இருந்ததென்றும் ஆனல் பெப்ரவரி மாதத்துக்குப் பின்னர் நிலைமை மாறிவிட்டதென்றும் அவர் குறிப்பிட்டார். இப்பொழுது சிகிச்சைபெறுகிறவர்கள் யாழ் மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளையும் சேர்ந்தவர்களாவர்.

# 36 பௌத்த ஆசிரியர்கள் நியமனம் ஊர்ஜிதம்

யாழ்ப்பாணம், புதன் கரவெட்டி, அச்சுவேலி அல்வாய் புத்தூர் ஆகிய பௌத்த பாடசாலைகளில் கடமையாற்றும் 36 ஆசிரியர்களின் நியமனங்கள் கல்வி அமைச்சரினல் உறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்த 15 மாதகால வேதனமாக தலா 1500 ரூபாவும் இவர்களுக்கு வழங்குமாறு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

# இந்திய புத்தகங்களுக்கு இங்கு அட்டை போடுகிருர்கள்?

## 'தவஸ' பத்திரிகை சரடு

கோட்டை, செவ்வாய் இந்தியாவிலிருந்து இங்கு தருவிக்கப்படும் தமிழ் புத்தகங்கள், சஞ்சிகைகளுக்கு இங்கு புதிய முகப்புக்கொடுத்து விற்கப்படும் வியாபாரம் ஒன்று இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாம்! 'தவஸப்' பத்திரிகையில் இச்செய்தி முதற்பக்கத்தில் வெளியாகியுள்ளது. அப்பத்திரிகையின் யாழ்ப்பாண நிருபர் இச்செய்தியை அனுப்பியிருக்கிருர்,

இந்தியாவிலிருந்து தருவிக்கப்படும் புத்தகங்கள், சஞ்சிகைகள் தருவிக்கப்படுவதற்குத் தடை விதிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் இந்த வேளையில் இந்தப் புது மாதிரியான வியாபாரத்தை நடாத்திப் பார்க்க முயற்சி நடக்கிறதாம்.

இந்தியாவில் அச்சடிக்கப்பட்டு இந்த நாட்டுக்கு வெளிப்படையாகவும் இரகசியமாகவும் தருவிக்கப்படும் புத்தகங்களுக்கு இங்கு புதிய அட்டைகள் போட்டு விற்கப்படுகின்றதாம். இந்தியாவில் போடப்படும் அட்டைகள் இங்கு கழற்றப்பட்டு இங்கேயே தயாரித்த அட்டைகள் போடப்படுகின்றனவாம்.

பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த முயற்சி மிகவும் வெற்றியளித்து வருவதாக பல வியாபாரிகள் ஒப்புக் கொள்கிருர்களாம்.

# மன்னர் கொலை முயற்சி வழக்கு; 18-ல் தீர்ப்பு

யாழ்ப்பாணம், புதன் மன்னர் கொலைமுயற்சி வழக்கில் எதிரி கைமோசக் கொலைமுயற்சிக் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து நீதியரசர் தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 18-ந்திகதிக்கு ஒத்திவைத்தார்.

இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ்கோர்ட்டில் நீதியரசர் ஓ எல் டி கிறெட்சர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் மன்னரில் 69-ம்ஆண்டு ஏப்ரல் 4-ந்திகதி போல்சம்மாவைக் கொலை செய்ய முயற்சித்ததாக கே- வேலுப்பிள்ளை என்பவர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் சிவாபாலேந்திரன் நியமிக்கப்பட்டிருந்தார்

அசைஸ் விசாரணை இம்மாதம் 3ந் தேதிவரை ஒத்திப் போடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

பிணைப்பணம் கட்டக் கூடிய இரண்டு விற்பனை ஆண் பிரதிநிதிகளும் பிணைப் பணம் கட்டக் கூடிய ' ஒரு கஷியரும் உடனே தேவை. நேரில் வரவும், அல்லது விண்ணப்பிக்கவும். மனேஜர் ஆர். டி. என். ஸ்ரோஸ் அன் சேல்ஸ் ஏஜன்சி, மேல் மாடி, நம்: 3/1 ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 2191

### விற்பனைக்கு

வேலணை கிழக்கில் அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையில் மண்கும்பான் வேலணை வீதியில் உள்ள "மண்சிவந்தான்" என்னும் பனங்காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கும் தோட்டம் செய்வதற்கும் ஏற்றது. லான்ட் இன்வெஸ்ற்மென்ட், 6, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 2903

யாழ்ப்பாணம் - நல்லூர் வடக்கில் பெரிய வளவும், புதிய வீடும் விற்பனைக்கிருக்கிறது. விலை சகாயம். மனுச் செய்க. வெஸ்டன்றேட்ஸ், தபால்பெட்டி 54, யாழ்ப்பாணம். 2901

பெர்குஷன் 12 ஆணி டிறக்ரர் பெட்டி ஒன்றும் ரில்லர் ஒன்றும் சுப்பர் டெக்ஸ்ரா டிறக்ரர் ஒன்றும் உடனே விற்பனைக்குண்டு. ஐனுசெங்கல் ஓட்டுத் தொழிற்சாலை, கண்டாவளை. 2908

### தவறிவிட்டது

ஆரோக்கியம் அலங்காரத்தினது பாஸ்போட், விசா தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ச. இராசையா, 109/6, பருத்தித்துறைவீதி, நல்லூர் என்ற விலாசத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் தரப்படும். 2915

## புதிய நிர்வாகிகள்

ஆனையிறவு. செவ்வாய்

தமிழ் சோஷலிச முன்னணியின் ஆனையிறவுக் கூட்டம் திரு. எஸ். சுப்பையா தலைமையில் ஸ்தல ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

கீழ்க்கண்டோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள்: தலைவர்: திரு எஸ் சுப்பையா, செயலாளர். திரு எம் செல்வநாயகம், உதவிச் செயலாளர்: திரு வ அருட்சோதிநாதன், பொருளாளர்: திரு எஸ் ஆழ்வாப்பிள்ளை. ஏழு பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

... ...

## பரந்தன் ஸ்ரீ ல.சு.க. தலைவர்

ஆனையிறவு, செவ்வாய்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பரந்தன் கிளையின் புதிய தலைவராக திரு. கே. தம்பிநாயகம் தெரிவுசெய்யப்பட்டார். இவர் தமிழ் சோஷலிச முன்னணியின் கிளிநொச்சிக் கிளையின் முக்கிய உறுப்பினரும், யாழ். சுருட்டுத் தொழிலாளர் சங்க உறுப்பினருமாவர்.

......

## இடமாற்றம்

எழுதுமட்டுவாள், செவ்.

கைதடி நாவற்குழி மகா விஷ்ணு வித்தியாசாலையில் தலைமையாசிரியராக பணிபுரிந்த, திரு. வி. எஸ். கந்தையா கோயிலாக்கண்டிப் பாடசாலைக்குமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

......

## உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் ஆலய மகோற்சவம் நேற்று ஆரம்பமானது. 11-ம் திகதி தேர்த் திருவிழாவும் 12-ம் திகதி தீர்த்த உற்சவமும் நிகழும். உற்சவ நாட்களில் தினமும் பல சைவ அறிஞர்களின் சொற்பொழிவுகளும் இடம் பெறும்.

## இன்றைய பலன்

(ஆவணி மாதம்17-ம் திகதி)
(2-9-70)

மேஷம்- குறிக்கோளில் வெற்றி கிடைக்கும். இலட்சியவாதிகளுக்கு இன்று பொன்னுன தினம்.

ரிஷிபம்- உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும் கிடைக்கும் உவகை சேரும்

மிதுனம்- தித்திக்கும் செய்தியுடன் தேனுன வாழ்வும் உண்டு மெத்தவும் பொருள் சேரும்.

கடகம்- துன்பத்தின் ரேகைகள் படரும். எதிலும் தயக்கம் ஏற்படும் நிதானம் வேண்டும்.

சிம்மம்- நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படலாம். சமயோசித புத்தியினுல் எதையும் சமாளிக்கலாம்.

கன்னி- நேர்முகப் பரீட்சைக்கு இன்று உகந்ததினம். தெய்வத்தின் அருள் தாராளமாய் கிடைக்கும்.

துலாம்- கடமையில் தடைதோன்றுய் நஷ்டத்துக்கு இடமுண்டு. நாவடக்கம் நன்று.

விருட்சிகம்- வாகனம் செலுத்துவோருக்கு இன்று நன்மதிப்புக்கிடைக்கும். சுபதினம்.

தனுசு- இதயக்கமலம் இன்பத்தால் மலரும். கற்றதனுல் பயனும் கிடைக்கும்.

மகரம்- ஏமாற்றலின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள் பொறுமை நன்று.

கும்பம்- காதல்வானில் சஞ்சரிப்பவர்களுக்கு கனிவான நிகழ்ச்சிகள் உண்டு. சிறப்பான தினம்.

மீனம்- எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும். நன்ருகச் சிந்தித்த பின்பு செயலாற்றுக

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## 3 வது பரிசு

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் இவ்வாண்டு நடத்திய சைவசமய நாடக எழுத்துப் போட்டியில் யாழ் நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்தினரின் பக்தகௌரி என்னும்புராண நாடகம் 3ம் இடத்தைப் பெற்றது. கழக உறுப்பினரான கு துரைராசா என்பவரால் இந்நாடகம் எழுதப் பட்டது.

## 'இணக்கசபை வேண்டும்'

இணுவில்

## இந்து வி. கழகம் நடத்திய விளையாட்டுப் போட்டிகள்

உடுவில், செவ்வாய்

இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மேற்படி கழகத்தினர் யாழ்ப்பாணமாவட்ட அடிப்படையில் ஒரு விளையாட்டுப்போட்டியை நடத்தினர்.

இணுவில் மத்திய சந்தை மைதானத்திலிருந்து ஆரம்பமாகிய இப்போட்டிகளை சுன்ளுகம் பொலிஸ் அதிபர் திரு நவரத்தினராஜா ஆரம்பித்துவைத்தார். விழா ஆரம்பக்கொடியை உடுவில் கிராம சபை அக்கிராசனர் திரு. எஸ். முத்துலிங்கம் ஏற்றி வைத்தார்.

போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்கள் வபரம் பின்வருமாறு:

15 மைல் சைக்கிள் ஓட்டம்- கே. சிவாகரன் - உடுவில், கே. செல்வராஜா- காங்கேசன்துறை, கே. மகேந்திரன்- அளவெட்டி.

8 மைல் மரதன் ஓட்டம்- எஸ் திருநாவுக்கரசு - பண்டத்தரிப்பு, ரி. ராஜேந்திரம் பண்டத்தரிப்பு, எஸ். இராமதாஸ் மானிப்பாய்.

ஒரு மைல் மாணவர் ஓட்டப்போட்டி- எஸ். கருணதேவன்-உரும்பராய் இந்துக் கல்லூரி, த. சந்திரமோகன்- மானிப்பாய்இந்துக்கல்லூரி, க. லிங்கரத்தினம்-நவாலி

அரை மைல் சிறுவர் ஓட்டம்- ந. குகதாசன் - இணுவில், ஆ. கயிலயங்கிரிநாதன் இணுவில், மா. திருக்கேதீஸ்வரன்-கோண்டாவில்.

தேங்காய் அடித்தல் போட்டி - க பூபாலு-உடுவில்

அரை மைல் சிறுமிகள் ஓட்டம்- கா. மகாராணி- இணுவில், த. புஸ்பநாயகி- இணுவில், தி' யோகராணி- இணுவில்.

பார்வையாளர் ஓட்டப் போட்டி- ரி. ஆனந்தராசா- மானிப்பாய், பி பத்திநாதர் பண்டத்தரிப்பு. எம். பத்மநாதன்-உடுவில்.

— —

## காந்தி இல்லம் சாம்பியன்

அம்பன், செவ்வாய்

அச்சுவேலி ஸ்ரீ விக்கினேஸ்வர சனசமூக நிலைய இல்ல விளையாட்டுப் போட்டிகள் நிலையத் தலைவர் திரு. நா. அருள்நந்தி தலைமையில் நடைபெற்றது. இவ் விழாவில் அச்சுவேலிக் கிராம சபைத் தலைவர் திரு. சு. கதிர்காமத்தம்பி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். மேற்படி நிலைய இல்லங்களான, காந்தி நேரு இல்லங்களுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் நேரு இல்லம் 126 1/2 புள்ளிகளையும், காந்தி இல்லம் 130 1/2 புள்ளிகளையும் பெற்று காந்தி இல்லம் சாம்பியன் கேடயத்தைப்பெற்றுக் கொண்டது. இல்லப்பிரிவு சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம்: மேற்பிரிவு: க. திருவாதரன் மத்திய பிரிவு; பொ. சிவானந்தசுந்தரம், க. நிர்மலா கீழ்ப்பிரிவு: செ. இராசேந்திரம், க கெங்கநிதி செ. தங்கவதி.

மணமானவர்களுக்கும் இளம் வாலிபர்களுக்குமிடையிலே நடைபெற்ற கயிறு இழுத்தல் போட்டியில் மணமானவர்கள் கோஷ்டி வெற்றியீட்டியது வெற்றி பெற்ற வீரர்களுக்கு கிராமசபைத் தலைவர் சான்றுப் பத்திரங்களும் பரிசில்களும் வழங்கினுர்.

......

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 2—9—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததினவாழ்த்து, ... இசைக்கதம்பம் ... 6-15 பாமாலை, 7-00 திரைகானம், 7-15

## நவநாட்கள்

பண்டத்தரிப்பு, செவ்.

இளவாலை புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த உற்சவத்திற்கான நவநாட்கள் கொடியேற்றத்துடன் ஆரம்

சங்குவேலியில்

## நடராஜர் பிரதிஷ்டை

உடுவில், புதன்

சங்குவேலி சிவஞானப் பிள்ளையார் கோவிலில் இன்றுகாலை புதிய நடராஜர் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற இருக்கின்றது. இரவு திருக்கல்யாணம் நடைபெறும். மேற்படி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ விழா இம் மாதம்6-ம் திகதி ஆரம்பமாகிறது. 14, 15-ம் திகதிகளில் தேர், தீர்த்தோற்சவங்கள் நடைபெறும். 18-ம் திகதி நடைபெறும் ஸ்ரீ ஞான வைரவசுவாமி பொங்கலுடன் விழா முற்றுப்பெறும்.

— —

## பிரதிஷ்டா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன்

வவனிக்குளம் சிவ ரம் ஸ்ரீவிநாயகர் கோவில் நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 4-ந் திகதி நடைபெறவிருக்கிறது

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன்

அச்சுவேலி சந்நிதி வீதிக்கு அருகாமையிலிருக்கும் மகிழடி நரசிங்க வைரவப் பெருமானின் மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் நடைபெறவிடுக்கிறது. இன்று வைரவப் பெருமான் ஊர்வலமும் நாளை மகா யாகாரம்பம் முதலிய சடங்குகளும் நடைபெறும்.

......

## ஆழ்குழியில் வீழ்ந்தவர் மீண்டார்

எழுதுமட்டுவாள், செவ்.

மின்சார இணைப்பு வேலையில் துரிதமாக ஈடுபட்டிருந்த இளைஞன் ஒருவன் மின்சார கம்பங்கள் நாட்டும் எட்டரை அடி ஆழமான குழிக்குள் வீழ்ந்துவிட்டான்.

இச்சம்பவம் பளைக்கண்மையில் நடைபெற்றது.

24 வயதுடைய தியாகராசா என்ற இவ்வாலிபன் விழுந்த குழிக்குள் தண்ணீரும் சகதியும் நிறைந்திருந்தமையால் இவரது தலையைத் தவிர்ந்த ஏனையபகுதிகள் மண்ணுல் மூடுண்டுவிட்டன.

இவருடன் வேலையிலீடுபட்டிருந்த மின்சார இணைப்புத் தொழிலாளரும் கண்காணிப்பாளரும் துரிதமாக

## காணுவில் மீண்டும் குடியாட்சி

நிக்கோஷயா, செப் 1

காணுவில் குடிமக்கள் ஆட்சி தொடங்கியுள்ளது. காணுவில் நடந்த தேர்தலில் அரசாங்கக் கட்சி பெரும்பான்மை பெற்று வெற்றி பெற்றுள்ளது.

காணுவின் முன்னுள் தலைவர் திரு. நிக்ருமா 4 ஆண்டுகளுக்கு முன்பு அரசிலிருந்து கவிழ்க்கப்பட்டார். அதன் பின் அங்கு மக்கள் ஆட்சி நடைபெறவில்லை. 4 ஆண்டுகளுக்குப்பின் இப்பொழுதே இந்நாட்டில் தேர்தல் நடைபெற்றுள்ளது.

காணுவின் ஜனுதிபதியாக காணுவின் முன்னுள் பிரதமர் நீதியரசர் தெரிவுசெய்யப்படும் வாய்ப்பிருக்கிறது,

......

## குருக்கள் தியானம்

பண்டத்தரிப்பு, செவ்வாய்

ஓ. எம். ஐ. குருக்களின் வருடாந்த தியானம் யாழ்ப்பாணத்தில் கடந்தவாரம் நடைபெற்றது, இதனைத் தொடர்ந்து (சுதேச குருக்கள்) மேற்றிராசனக் குருக்களின் தியானம் பண்டத்தரிப்பு பத்திமா கன்னியர் மடத்தில் நடைபெற்றுவருகிறது.

......

## அன்னதானம்

பண்டத்தரிப்பு, செவ்.

இளவாலை - சேந்தான்குள மீன்பிடித்துறையில் புனித அந்தோனியார் திருநாளில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

... ...

## திரைப்பட கூட்டுஸ்தாபன நகல் மசோதா

கோட்டை, செவ்.

சட்டவரையறை இலாகா திரைப்படக் கூட்டுஸ்தாபனம் ஒன்றை நிறுவுவதற்கான நகல் மசோதாஒன்றை தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கிறது. திரைப்படக்கூட்டுஸ்தாபனம் 3மாத காலத்தில் நிறுவப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பூநகரிக் கிராமச்சபை கேள்வி விளம்பரம்

பூநகரிக் கிராமச்சபை இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலைக்கு 1971-ம் ஆண்டிற்கு மருந்து வகைகளுக்கு கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

கேள்விகள் 1970 ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் 20-ந் திகதியுடன் முடிவடையும். கேள்விப் பத்திரங்கள் 19 ஆம் திகதி முற்பகல் 3-30 மணிக்கு பின் வழங்கப்படமாட்டாது.

கேள்விப் பிணைப்பணமாக ரூபா 50/- செலுத்தப்படல் வேண்டும். கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 5/- செலுத்தப்படல் வேண்டும். இப்பணம் எக்காரணம் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. கேள்விகள் சீல் வைத்து பதிவுத்தபாலில் அக்கிராசனர் கிராமச்சபை பூநகரி என முகவரியிட்டு அனுப்பி வைக்கவேண்டும். பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படாத கேள்விகள் நிராகரிக்கப்படும். எக்கேள்விகளையும் ஏற்கவோ அல்லது மறுக்கவோ அக்கிராசனருக்கு அதிகாரமுண்டு. விநியோகிக்கப்படும் மருந்து வகைகள் தராதரம் குறைவு எனக் கண்டு பிடிக்கப்பட்டால் அதனை திருப்பி எடுக்க ஆயத்தமாயிருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட மருந்துவகைகளுக்குகட்டளை அனுப்பியதும் ஒரு கிழமைக்குள் கிராமச்சபை அலுவலகத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும. ஆனுல் எந்தவிதமான பிரயாணச் செலவுகளும் கொடுக்கப்பட மாட்டாது. பூநகரி கிராமச்சபை அக்கிராசனரால் வழங்கப்படும் கேள்விப்பத்திரத்திலேயே கேள்வி தயாரிக்கப்படல் வேண்டும். அதனை மீறி அனுப்பப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலதிக விபரம் அறிய விரும்பின் பூநகரி கிராமச்சபை அலுவலகத்தில். அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

அக்கிராசனர் கி. ச
பூநகரி.
2431 30-8 70.

## அறிவித்தல்

இதன் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள ஆதனங்கள், அவ்வாதனங்களின் வரி நிலுவைகட்காக பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டு நெல்லியடிப் பட்டின விசேட ஆணையாளரால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அவ்வாதனச் சொந்தக்காரர்கள் விரும்பின் 1970 செப்டம்பர் மாதம் 30-ந் திகதி வரை அவ்வவ் ஆதனங்கள், மேலான வரிநிலுவைகளையும், வெளியாத்து விற்பனை முதலாய செலவுகளையும்

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ்—ஜெயந்தி நடித்த
இரு கோடுகள்

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி
(கொழும்பு)

வெலிங்டன் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கொழும்பு)

வெலிங்டன் யாழ்ப்பாணம் திரைகளில்

தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ செளகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும்
தெய்வத் தமிழ்க் காவியம்'

# துணைவன்

கதைவசனம் பாலமுருகன் — சங்கீதம் K.V.மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்

## 'இணக்கசபை வேண்டும்'

தாவடி, செவ்வாய்

தாவடிக் கிராமத்திற்கு 'இணக்கசபை' ஒன்று வேண்டுமென்று. உடுவில் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வி. தருமலிங்கத்தை தாவடி வாசிகள் கோரியுள்ளனர்.

ஸ்ரீகாலிங்கன் இணுவில்
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர்-கே. ஆர். விஜயா நடித்த
**விவசாயி**

வெஸ்லிசினிமா மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
போயா, பிரிப்போயா 2-30
முத்துராமன் - புஷ்பலதா நடித்த
**சுபதினம்**

MANOHARA JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Pre-Poya, Poya 4 Shows
George Milton
in
POKER WITH PISTOLS
(Scope-color)

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m.
Poya, Pre-poya 4 Shows
Genevieve Waite
in
JOANNA
(Adults only)

பரப்பு, 6-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள். 5-30 இளைஞர் கண்டுபிடிப்புகள், இரவு 6-15 பாமாலை, 7-00 திரைகானம். 7-15 வீணை. 7-45 பேச்சு. 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி. 9-30 கலைக்கோலம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

இளவாலை புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த உற்சவத்திற்கான நவநாட்கள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன. 7ம் திகதி இரவு வெஸ்பர் ஆராதனையும், 8ம் திகதி திருநாட்பூசை சுற்றுப் பிரகாரமும் நடைபெறும்

ராஜா – யாழ்ப்பாணம்
(10-30, 2-30, 6-30, 9-45)

ஸெயின்ஸ்தான் கொழும்பு (2-30, 6-30, 9-30)
சரஸ்வதி திருமலை (2-30, 6-30, 9-30)

* துடிக்கும் இரத்தம் பேசட்டும்!
* துணிந்த நெஞ்சம் நிமிரட்டும்!!
* உழைக்கும் வர்க்கம் சேரட்டும்!!!
* உரிமை உடமை காணட்டும்!!!

சோகத்தாய் சாரதாவின் உணர்ச்சி நடிப்பைக் காண வாரீர்.

★ செம்மீன் ஷீலா
★ சாரதா ★ மது
பிரேம்நசீர் ★ திக்குரிச்சி
மற்றும் பலர் நடித்த



இந்திய ஜனாதிபதியின் ஊர்வசி பரிசுபெற்ற
சுப்பிரியா பிக்சர்ஸ்

# துலாபாரம்

டைரக்டர்: வின்சன்ட்
(மலையாளம்)
எஸ். ரி. ஆர். பிலிமஸ்

சர்வதேச திரைப்பட அரங்கில் பாராட்டுப்பெற்ற படம். தென்னகத்திரைகளில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச்சித்திரம்.

யாழ்-வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன் ★ ஜெய்சங்கர்
ராஜஸ்ரீ ★ வெண்ணிறஆடைநிர்மலா
நடித்த

# பூவா தலையா

இவருடன் வேலையிலீடுபட்டிருந்த மின்சார இணைப்புத் தொழிலாளரும் கண்காணிப்பாளரும் துரிதமாக முயன்று அவரை மீட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 7-வது சைவ மகாநாடு

கைதடி, செவ்

கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் ஏழாவது சைவ மகாநாடு இம்மாத இறுதியில் மூன்று தினங்கள் கைதடியில் நடைபெறவிருக்கின்றது. இவ்வாண்டு மகாநாநாட்டை முன்னிட்டு சைவ சமய நாடகப் போட்டி, சைவசமய நடனப்போட்டி, பேச்சுப்போட்டி என்பன அகில இலங்கை ரீதியில் நடாத்தப்படவுள்ளன.

மகாநாடு, சைவ மகாநாடு, சைவ இளைஞர் மகாநாடு, சைவமங்கையர் மகாநாடு, சைவ இலக்கிய மகாநாடு எனப் பரந்த அடிப்படையில் நடைபெற இருக்கின்றது. மகாநாட்டில் சிறப்புமலர் ஒன்றும் வெளியிடப்படும்.

......

## உருத்திரபுரத்தில் இனஎழுச்சி விழா

யாழ்ப்பாணம், புதன்

இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் இன எழுச்சி விழாவும் தமிழரசுக்கட்சி ஆட்சிமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் பொது வரவேற்பு விழாவும் திரு, சிவ கந்தையா ஜே. பி. தலைமையில் உருத்திரபுரம் தபால் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள விளையாட்டு மைதானத்தில் இம்மாதம் 15-ந்திகதி நடைபெறவிருக்கின்றன. இதனையொட்டிக் கிளிநொச்சியிலிருந்து உருத்திரபுரத்திற்கு விசேஷ பஸ் சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

......

## நினைவுக் கூட்டம்

பண்டத்தரிப்பு, செவ்வாய்

மெல்போர்ன் நகரிலுள்ள புனித ஜோர்ஜ் கல்விக் கழகத்தில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர்கள் காலம் சென்ற வண. சாள்ஸ் மத்தியூஸ், வண. லோங் அடிகள், ஒய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் திரு, என், சி. சவிரிமுத்து ஆகியோரை நினைவுகூரும் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

அவ்வாதனச் சொந்தக்காரர்கள் விரும்பின் 1970 செப்டம்பர் மாதம் 30-ந் திகதி வரை அவ்வவ் ஆதனங்கள், மேலான வரிநிலுவைகளையும், வெலியாத்து விற்பனை முதலாய செலவுகளையும் செலுத்தி ஆதனங்களைத் திரும்பவும் தமதாக்கிக்கொள்ள முடியும். உரிய முயற்சிகளை மேற்குறிப்பிட்ட திகதிக்குள் செய்துமுடிக்கத் தவறின் அவ்வாதனங்களை இவ்வுள்ளூராட்சி மன்றத்தின் உடமையாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வட்டாரம் இல: 1- சுடலை வீதி: 19, 53, 77, 81, 95, 97, 99, 131.
உடுப்பிட்டி வீதி: 104/18.

வட்டாரம் இல: 2- தச்சர் ஒழுங்கை: 81/1, 81/62, 81/63, 9/2, 9/3, 9/4, 9/6, 22/4.

வட்டாரம் இல: 3- கோவில் சந்தை வீதி: 5/2, 30/3.
அணிஞ்சிலடி வீதி: 20/8, 28/1.
தாமரைக்குளம் வீதி: 5/2. 5/4, 29/2, 79, 97, 99, 22/9, 31/1, 62/1, 62/8, 62/15, 62/16, 62/18, 62/19, 62/24, 62/26, 62/29, 62/30, 62/56, 62/19, 62/69, 62/76, 62/39, 62/46, 62/50, 62/54, 62/86, 62/100, 62/103, 62/105, 62/120, 62/121, 62/131, 62/122, 62/123, 62/124, 62/132, 62/133
பருத்தித்துறை வீதி: 158/19, 202/1, 202/3, 202/13, 202/54.
துன்னாலை வீதி: 167, 327/19.
புதுத்தோட்டம் ஒழுங்கை: 63/35, 63/41, 63/1, 36.
குலானை வீதி: 22.
ஞானசாரியார் வீதி: 22, 72/1, 72/2, 72/5, 72/7, 72/9.

வட்டாரம் இல: 4- துன்னாலை வீதி: 32/14, 144/47, 144/52.
தச்சன் தோட்டம் பிள்ளையார்கோவில் வீதி: 23/8.
அம்மன்கோவில்வீதி: 26/17, 26/வங, 26/53, 26/62, 26/86, 26/97, 26/98, 26/99, 26/100, 26/103, 26/108, 26/109, 26/110, 26/119, 26/126, 26/140, 94/3, 21/10, 21/11.
செட்டியார் தெரு: 27/12.
பத்திரகாளி கோவில் வீதி: 11/5, 11/20, 85/8, 85/14, 85/17.
செங்குந்தர் வீதி: 43/3, 14, 16, 30/1, 32/2.
சாவகச்சேரி வீதி: 18/3, 18/9, 18/10, 18/22, 18/23, 18/25, 18/26, 18/28, 18/50, 18/56, 18/67, 18/70, 18/74, 18/76, 18/77, 18/85, 18/88, 18/95, 18/98, 18/99, 18/104, 18/107, 18/122.

வட்டாரம் இல: 5- பருத்தித்துறை வீதி: 86/53, 86/72, 86/76, 86/86, 86/87, 86/89, 86/91, 86/1556, 86/171, 86/176, 86/184, 86/191 86/194, 86/195, 86/204, 86/211, 86/224.
துன்னாலை வீதி: 15/1, 114, 114/1.
முடக்காடு: 33
சரஸ்வதி வித்தியாலயம்: 23/12.
அரசடி வீதி: 4/2, 4/4, 4/5, 32/24.
சண்டில் வீதி: 39

வட்டாரம் இல: 6- பிள்ளையார் கோவில் வீதி: 59/4, 57/14, 89/12, 89/14, 89/17, 111.
இராசசிங்கம் வீதி: 3/1.

வட்டாரம் இல: 7- யாழ்ப்பாணம் வீதி: 153.
இராய் பிள்ளையார் கோவில் வீதி: 56, 148, 154/9, 154/38, 154/43.
இராசசிங்கம் வீதி: 28/6, 28/20.
கலட்டி வீதி: 27
உச்சில் வாய்க்கால் ஒழுங்கை: 18/10.

அ. அ. யோசேப்,
விசேட ஆணையாளர்,
நெல்லியடிப் பட்டினம்.

விசேட ஆணையாளர் அலுவலகம்,
நெல்லியடிப் பட்டினம்,
கரவெட்டி, 29-8-70.

2428

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இஸ்ரேலுக்கு எதிராக ராணுவ சமபலம் மாறுவதற்கு அமெரிக்கா அனுமதிக்காது"

## ஜாரிங் அமைதி முயற்சி தொடர்கின்றது

நியூயோர்க், செப். 1

மேற்காசியாவில் ராணுவ சமபலம் இஸ்ரேலுக்கு பாதகமாக மாறுபடுவதை அமெரிக்கா அனுமதிக்காது.

அமெரிக்க வெளி உறவு அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

அமெரிக்க செனட்டின் ஆயுத உதவிக் கமிட்டியில் அமைச்சர் வில்லியம் ரொயார்ட் நேற்று இக்கருத்தை வெளியிட்டார்.

போர் ஓய்வுக் காலத்தில் மேற்காசியாவில் ராணுவ சமபலம் இஸ்ரேலுக்கு எதிராக மாறுவதை நாம் அனுமதிக்கப்போவதில்லையென்று அவர் தெரிவித்தார். சூயஸ்கால்வாய்ப் பிரதேசத்தில் எகிப்தியர் பெரிய அளவில் ஏவுகணைத் தளங்களை நிர்மாணிக்கத் தொடங்கியிருப்பதாக இஸ்ரேல் தெரிவித்துவரும் குற்றச்சாட்டுகளின் காரணமாக அமெரிக்கா இந்த வாக்குறுதியை வெளியிட்டிருக்கின்றது.

அமெரிக்க அமைதி யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டபின்னர் உருவாகியுள்ள நிலைமைகள் பற்றி இன்று அதிபர் நிக்ஸன் தமது உயர் அதிகாரிகளுடன் ஆலோசனைகள் நடத்துகிறார் சமீபத்தில் தென்கிழக்காசிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டுத்திரும்பியுள்ள அமெரிக்க துணை அதிபர் ஆக்னுவும் இந்த ஆலோசனைகளில் கலந்து கொள்வார்.

### ஜாரிங் ஆலோசனை

ஐ. நா. விசேஷப் பிரதிநிதி டாக்டர் குனார் ஜாரிங் தமது அமைதிப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்தினார். இஸ்ரேல் பிரதிநிதி இன்னும் அமெரிக்காவுக்குத் திரும்பிவரவில்லை, என்றாலும் டாக்டர் ஜாரிங் இதர பிரதிநிதிகளுடன் ஆலோசனைகளை ஆரம்பித்துள்ளார். நேற்று டாக்டர் ஜாரிங் எகிப்திய பிரதிநிதியைச் சந்தித்துப் பேசினார்.

அடுத்து ஜோர்டான் பிரதிநிதியை அவர் சந்திப்பார் என்று தெரிகின்றது. இஸ்ரேல் பிரதிநிதி இன்னும் நியூயோர்க் திரும்பாதது குறித்து ஐக்கிய அரபுக் குடியரசுப் பிரதிநிதி கருத்துத்தெரிவிக்கையில் அமைதியேற்படுவது தனக்குப் பெரிய அபாயம் என்று இஸ்ரேல் கருதுகிறது. இதனால்தான் அமைதிப் பேச்சுக்களை இஸ்ரேல் தாமதமாக்கிக் கொண்டிருக்கிறது என்றார்.

### இஸ்ரேல் புகார்

எகிப்தியர் சூயஸ்கால்வாய்ப் பகுதியில் போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து மீறிவருவதாக இஸ்ரேல் மீண்டும் புகார் தெரிவித்திருக்கின்றது. சூயஸ்கால்வாயின் 19 மைல் சுற்றளவுக்குள் எகிப்தியர் ஏவாயுதத் தளங்களை நிறுவிவருவதாக இஸ்ரேல் புகார் செய்துள்ளது.

## லெனின்கிராட்டில் காந்தி நினைவுச் சின்னங்கள்

மாஸ்கோ, செப். 1

இந்தியாவின் மாபெரும் தலைவர் காந்தி பற்றிய கண்காட்சியில் வைக்கப்பட்ட ஞாபகச் சின்னங்கள் பல, லெனின்கிராட் புராமனித வரலாற்று மியூஸியத்திற்கு அன்பளிப்புச்செய்யப்பட்டுள்ளன.

மகாராஷ்டிரா இந்திய-சோவியத் கலாசாரக் கழகம் கண்காட்சிப் பொருட்களை வழங்கியுள்ளது.

---

## பிரதேச சிவில் என்ஜினியரிங் சேவை

கோட்டை, செவ்.

நீர்ப்பாசன, நெடுஞ்சாலை மின்சார அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயகா ஒன்றுபடுத்தப்பட்ட பிரதேச சிவில் என்ஜினியரிங் சேவை ஒன்றை விரைவில் ஸ்தாபிக்கவிருக்கிறார்.

இந்தச் சேவையினால் நாட்டின் பல்வேறு அமைச்சின் கீழ் இயங்கும் என்ஜினியரிங் இலாகாக்கள் தனிப்பட்ட அமைச்சொன்றின் கீழ்க் கொண்டு வரப்படும்.

## சி. எஸ். யு. எஸ் பயணம்

சென்னை, செப். 1

வடஅமெரிக்காவின்தென் கோடியிலுள்ள மெச்சிக்கோ நாட்டில் உலக விவசாய மகாநாட்டில் கலந்து கொள்ள திரு. சி. சுப்பிரமணியம் அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார்.

திரு. சுப்பிரமணியம் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்கள், விவசாய இலாகா அதிகாரிகள் சேர்ந்து 12பேர் இம்மகாநாட்டில் கலந்து கொள்ள சென்றுள்ளனர்.

இம்மாதம் 9, 10-ம் திகதிகளில் நடைபெறும் இம்மகாநாட்டில் அரிசி, சோளம், கோதுமை மற்றும்தானியங்களின் விளைச்சல்பற்றியும் புதியரகங்கள் பற்றியும் விவாதிக்கப்படும்.

திரு. சுப்பிரமணியம், மெக்சிக்கோ நாட்டிற்கு செல்லும வழியில் சிங்கப்பூர் பிலிப்பைன்ஸ், ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு பிரயாணம் செய்வார். ஜப்பான் நாட்டில் ஒசாகா நகரில் நடைபெறும் உலகபொருட்காட்சி (எக்ஸ்போ-70) யைப் பார்வையிட்டபின் அமெரிக்காவில்லொஸ்ஏஞ்சல்ஸ், நியூயோர்க், வாஷிங்டன், ஆகிய நகரங்களுக்கு சென்று பின் இங்கிலாந்து செல்வார் 20 நாட்கள் தங்கிநின்று வெளிநாடுகளில் பிரயாணம் செய்தபின் திரு சுப்பிரமணியம் சென்னை திரும்புவார்.

## சென்னை வானொலி

சென்னை, செப். 1

வானொலியில் ''ஆகாச வாணியின் மதராஸ்வானொலி நிலயம்'' என்றுசொல்வதை ''சென்னை வானொலி நிலையம்'' என மாற்றும்படி கோரி தமிழக அமைச்சர் திரு. மு. கருணாநிதி மத்திய ஒலிபரப்பு மந்திரிசபைக்கு எழுதியுள்ளார்,

இது பற்றி மேல்சபையில் சட்ட மன்ற உறுப்பினர் திரு. திருஞானசம்பந்தன் கேட்டபோது திரு. கருணாநிதி தாம் எழுதிய கடிதத்திற்கு மத்திய மந்திரிசபை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்தார்.

— —

## அநாதைப் பிள்ளைகள் ஆசிரமம்

உடுப்பிட்டி, செவ்.

வடமராட்சியில் சுமார் இரண்டுலட்சம் ரூபா செலவில் நிறுவப்படவிருக்கும் அநாதைப்பிள்ளைகள் ஆச்சிரமத்திற்காக அல்வாய் மாலிசந்தி மடத்தடிப்பிள்ளையார்கோவிலின் பின்புறம் உள்ள சுமார் 30 பரப்புக் காணி விலைக்கு வாங்கப்பட்டுள்ளது

இக்காணி சுவாமி பிரேமானந்தா தலைமையில் சிரமதானமூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

## தெ. ஆபிரிக்கா தடை

லண்டன், செப். 1

சர்வதேச அமைச்சூர் விளையாட்டுக் கழகத்திலிருந்து தென்னாபிரிக்கா விலக்கி வைக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கை காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

— —

உலகமலர் கண்காட்சி

## இலங்கைத் தூதர் திறந்து வைப்பார்

லண்டன், செப். 1

வடமேற்கு இங்கிலாந்திலுள்ள கரையோரப் பட்டினமாகிய சவுத்போர்ட்டில் மாபெரும் மலர்க் கண்காட்சி ஒன்று சமீபத்தில் நடைபெற்றது. இங்கிலாந்திலுள்ள இலங்கை ஹைகமிஷனர் டாக்டர் எம். வி பி. பீரிஸ் இந்தக்கண்காட்சியை திறந்து வைத்தார். பெருந்திரளான இலங்கையர்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

சவுத்போர்ட் நகரமண்டபத்தில் இக் கண்காட்சி நடைபெற்றது. இங்கு வைக்கப்பட்டிருந்த 20 லட்சத்திற்கு அதிகமான அழகிய மலர்கள் கண்கொள்ளாக் காட்சியாக விளங்கியது. இந்த உலக மலர்கண்காட்சியில் இலங்கையின் காட்சி அரங்கும் இடம்பெற்றது. பெல்ஜியம், பிரான்ஸ், ஒல்லாந்து, கென்யா, சிங்கப்பூர், ஆபிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்ரியா. மால்டா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் இதில் பங்கு கொண்டுள்ளன.

— —

## நூல் வெளியீடு

பண்டத்தரிப்பு. செவ்.

சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தினர் 'இறை பணிப் பாடல்கள்' என்னும் திருவழிபாட்டு நூலை அண்மையில் வெளியிட்டுள்ளனர்.

## மக்கள் சேமிப்புக்கென புதிய வங்கி உருவாகும்

கோட்டை செவ்வாய்

பொதுமக்கள் தங்கள் வருமானங்களைச் சேமித்து வைத்துக் கொள்வதற்கு வசதியளிக்கும் வகையில் தேசிய சேமிப்பு வங்கியொன்றை மிக விரைவிலேயே ஆரம்பிப்பது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது.

இப்பொழுதிருந்து வரும் தபால்கந்தோர் சேமிப்பு வங்கி, லங்கா சேமிப்பு வங்கி, தேசிய சேமிப்பு இயக்கம் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தி ஒரே அமைப்பின் கீழ் கொண்டுவருவதுபற்றி ஆலோசிக்கப்படுவதாகத் தெரிகின்றது.

இப்பொழுது நடைமுறையிலிருக்கும் சேமிப்பு முறைகளையும் இனிமேல் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா ஆராய்ந்து வருகிறார்.

## 'சிங்கள - தமிழ்க்கலைப் பரிமாற்றம் வேண்டும்''

சங்கானை, செவ்.

'சிரமதானம் போன்ற பணிகளில் ஈடுபடுவதுடன் ஏழைப்பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி போதிப்பதிலும் அக்கறை கொண்டுள்ள சங்கானை பகுத்தறிவுக் கழகம் விழா எடுப்பது பொருத்தமானதே. இதனைப் பற்றி நாட்டில் உள்ள ஏனைய கழகங்கள் யாவும் இயங்குமேயானால் எதிர்காலச் சந்ததியினர் பயன் பெறுவதுடன் நாடும் நலம்பெறும்' என சங்கானை இளைஞர் பகுத்தறிவுக் கழகம் கலையகத்தின் 3-வது ஆண்டு நிறைவு விழா சங்கானை அரசடி ஆலய முன்றலில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றிய சங்கானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. அல்பிரட் செனவிரத்ன குறிப்பிட்டார்.

திரு. த. ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற விழாவில் சங்கானைப் பட்டின சபையின் 1-ம் வட்டார உறுப்பினர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

சமூகத்தில் நிலவும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு கலை ஒரு சிறந்த கருவியாகும். சமூகக் குறைபாடுகளை எப்படித்தான் சொல்லில் எடுத்தியம்பினாலும் மக்கள் மனதில் அது ஆழமாகப் பதிக்க இயலாது. நாடகமே இதற்கு ஏற்ற கருவி, இக்கருவியை எமது இளைஞர்கள் தக்க முறையில் பயன் படுத்த வேண்டும். அரசாங்கம் கலை கலாச்சாரத்திற்கு தக்க இடம் கொடுக்க முன்வந்துள்ள இவ்வேளையில் சிங்கள - தமிழ் கலாச்சாரங்களை இரு சாராரும் நேரில் பார்த்து அறியக் கூடிய வகையில் ...க்க வேண்டும எனவும் சொன்னார்.

'வெடி அரசன்' 'கொந்தளிக்கும் உள்ளம்', 'இரத்தப் பரிசு' 'பூதத்தம்பி' ஆகிய நாடகங்கள் போட்டியில் பங்குபற்றின வெற்றி பெற்ற நாடகங்களுக்கு கலையரசு சொர்ணலிங்கம் பரிசுகளை வழங்கினார்.

இறுதியில் கலையகத்தாரின் 10-வது தயாரிப்பான 'நட்புக்காக' என்ற சமூக நாடகம் இடம் பெற்றது: சங்கானை ப. ச. தலைவர் மற்றும் செல்வி சுசீலாகனகரத்தினம் ஆகியோரும் பேசினர்.

—

## அனாதைச்சாலையை உப சபாநாயகர் பாராட்டினார்

பண்டத்தரிப்பு, செவ்வாய்

'வாழ்வில் தஞ்சமற்று நெஞ்சுவருந்தும் அனாதைகளை வளர்த்து அவர்களுக்குக் கைத்தொழில்அறிவைப் புகட்டி வளர்த்து வருகின்ற அனாதைச்சாலைகளுக்கு அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது'.

இவ்வாறு மகோரை புனித வின்சன்ட் அனாதைச்சாலையில் நடைபெற்றவிழாவில்கலந்துகொண்ட உபசபாநாயகர் ஜனாப் ஐ. ஏ. காதர் தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் மகோரை புனித வின்சன்ட் அனாதைச்சாலையினை நடாத்தும் அமலோற்பவசபை குருக்களைப் பாராட்டினார்.

—

## "புதிய தபால் நிலையம் வேண்டும்"

யாழ்ப்பாணம், புதன்

போர்ஹான்ஸ்
புன்னகைப் புதிர்
போட்டி.
ரூபா 17,650-00
பரிசு பெற சந்தர்ப்பம் அளிக்கின்றது.

## தாகூரின் கதைகள் ரஷ்யாவில் படமாகின்றன

தாஷ்கண்ட், செப். 1

தாகூரின் 'ஒளியும் நிழலும், 'குறிப்பேடு' என்ற சிறுகதைகளைத் திரைப்படமாக்கும் பணியை உஸ்பெக் திரைப்படத் தயாரிப்பா... ...ரத்தை ஹம்ஸா தியேட்டரைச் சேர்ந்த குலஸோரா ஜமிலோவா ஏற்று நடிக்கிறார்.

அகா மிர்ஸ்யேவ், இஸான் கரிமோவ் ஆகிய பிரபல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகூரின் 'ஒளியும் நிழலும்', 'குறிப்பேடு' என்ற சிறுகதைகளைத் திரைப்படமாக்கும் பணியை உஸ்பெக் திரைப்படத் தயாரிப்பாளர்கள் ஆரம்பித்துள்ளனர். சிர் தர்யா நதிதீரத்தில் படப்பிடிப்புக்காக ஒரு 'இந்தியக் கிராமம்' உருவாக்கப்பட்டுள்ளது. ஷாஷா புஷானின் பாத்திரத்தைப் பிரபல நடிகர், போரிஸ் தாஷ்கென்ஸ்ட்ஸ்கி ஏற்று நடிக்கிறார். இவரது ஆருயிர்க் காதலியின் பாத்திரத்தை சேர்ந்த குலஸோரா ஜமிலோவா ஏற்று நடிக்கிறார்.

அகா மிர்ஸ்யேவ், இஸான் கரிமோவ் ஆகிய பிரபல நடிகர்கள் இப்படத்தை நெறிப்படுத்துகிறார்கள்.

தாகூரின் இலக்கியப் படைப்புகளை உஸ்பெக் திரைப்பட ஊழியர்கள் படமாக்குவது இது இரண்டாவது தடவையாகும். முன்னர் 'கங்கா புத்திரி' பெரு வெற்றியீட்டியது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

"கல்விப்பகுதியில்

# தமிழ்ப்பிரிவு தனியாக அமைக்கப்படவேண்டும்"

— வட்டுக்கோட்டை எம். பி.

சுழிபுரம், செவ்வாய்

'யாழ்ப்பாண மக்கள் விவசாயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இளைப்பாறிய உத்தியோகஸ்தர்கள் உட்படப் பல துறைகளையும் சேர்ந்தவர்களைக் கொண்ட விவசாயம் சம்பந்தமான ஆலோசனைக் குழுவொன்று யாழ். மாவட்ட அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும். இக்குழுவின் ஆலோசனைகள் மூலம் நல்ல திட்டங்களை உருவாக்கி விவசாயத்தை விருத்திசெய்து நல்ல பயன் காணலாம்' என இளைப்பாறிய தலைமை ஆசிரியர் திரு. சி. கார்த்திகேயருக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா குறிப்பிட்டார். மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு திரு. இ. தம்பையா ஜே. பி தலைமை வகித்தார். திரு-ஆ- தியாகராசா எம். பி. தொடர்ந்து பேசுகையில் 'எல்லா இலாக்காக்களிலும் கல்விப் பகுதிதான் மிகப் பெரியதாகும். கல்விப் பகுதியில் தமிழ்ப் பகுதிக்கு மட்டும் தனியாக ஒரு பிரிவை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் நல்ல அமைப்பையும் தகுக பயனையும் நாம் பெற்றுக் கொள்ளலாம்' என்றார்.

திருவாளர்கள் இ. ஆறுமுகம், அ- மகேஸ்வரன், க. மனோகரசிவம் உட்பட மற்றும் பலர் பாராட்டுரை வழங்கினர்.

## வடமராட்சியில் புகையிலைச் செய்கை

புலோலி, செவ்வாய்

வடமராட்சிப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட புகையிலைகள் விற்பனைசெய்யப்படாது தேங்கிக்கிடக்கின்றன. இதனால் அடுத்த முறை புகையிலை உற்பத்தி பாதிக்கப்படுமெனக் கருதப்படுகிறது.

## எம். பி. நடவடிக்கை

புலோலி, செவ்வாய்

நாகர்கோயில் மக்கள், இ. போ. ச. பஸ் சேவை மோசமாக இருப்பதனால் படும் கஷ்டங்கள் குறித்து, போக்குவரத்து அமைச்சரைச் சந்திக்கப் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பஸ் சேவை சீராக நடைபெறுவதற்கான திட்டம் ஒன்றைப் போக்குவரத்து அமைச்சரிடம் சமர்ப்பிப்பதற்கு எம். பி. தயாரித்து வருகிறார்.

## வேடர்களுக்கு கல்வி

பண்டத்தரிப்பு, செவ்வாய்

பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த கன்னியர்வாகரைப் பகுதியிலுள்ள வேடர் குலத்தவருக்குக்கல்வியூட்டி சீரான வாழ்க்கையை நடாத்தும் முறைகளைக் கற்றுக்கொடுக்கின்றனர்.

சமூக பொருளாதார அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த பிரான்சிஸ்கன் சபைக் கன்னியாஸ்திரியான சங். சிஸ் ஐறின் செனிவரட்ண இத்தகவலை வெளியிட்டுள்ளார்.


# ரூபா 17,650-00

பரிசு பெற சந்தர்ப்பம் அளிக்கின்றது.
ரொக்கமாக 50 ஆறுதல் பரிசுகள்



| | |
|---|---|
| முதலாவது பரிசு | ரூபா 5000-00 |
| இரண்டாவது பரிசு | ரூபா 3000-00 |
| மூன்றாவது பரிசு | ரூபா 2000-00 |

ரூபா 100/- விகிதம் 50 ஆறுதல் பரிசுகள் — ரூபா 5000-00
ரூபா 50/- விகிதம் 53 வியாபாரிகளுக்கான பரிசுகள் — ரூபா 2650-00

மேலே 4 அழகிய போர்ஹான்ஸ் பாவனையாளர்கள் அங்குமிங்குமாக காணப்படுகிறார்கள். நீங்கள் செய்யவேண்டியது இதுதான். கீழேயுள்ள போர்ஹான்ஸ் பாவனையாளர்களின் அழகிய புன்னகையை வெட்டி எடுத்து சரியான முகத்துடன் சேர்த்து முழுப் படமாக்குங்கள்.

முழுமையாக்கப்பட்ட படங்களை ஒரு மொத்தமான கடுதாசியிலோ அல்லது மட்டையிலோ ஒட்டி உங்கள் பெயர் விலாசம் ஆகியவற்றை பிரவேசப் பத்திரத்தில் தெளிவாக எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்: உங்கள் வாடிக்கைக் கடைக்காரரின் பெயரையும் விலாசத்தையும் குறிப்பிடத் தவறாதீர்கள். ஏனெனில் உங்கள் வியாபாரிக்கும் 50/- பரிசு உண்டு. நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும் ஒரு பெரிய அல்லது மத்திம சைஸ் போர்ஹான்ஸ் பற்பசை வெத்துப் பெட்டி அல்லது இரண்டு சிறிய சைஸ் வெத்துப் பெட்டிகள் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

நீங்கள் எத்தனை பிரவேசப் பத்திரங்களையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும் ஒரு பெரிய அல்லது மத்திம சைஸ் போர்ஹான்ஸ் பற்பசை வெத்துப் பெட்டி அல்லது இரண்டு சிறிய சைஸ் வெத்துப் பெட்டிகளை சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

வெத்துப் பெட்டியுடன் கூடிய பிரவேசப்பத்திரங்களை "போர்ஹான்ஸ் புன்னகைப் புதிர் போட்டி, ம/பா. ஷெனித் அட்வெடைசிங், த. பெ. இல. 1479, கொழும்பு என்ற விலாசத்திற்கு" அனுப்பிவையுங்கள்.

இப்போட்டியில் மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட், ஷெனித் அட்வெடைசிங் ஆகிய ஸ்தாபனங்களின் ஊழியர்களைத்தவிர, இலங்கையில் வசிக்கும் எவரும் கலந்து கொள்ளலாம்.

மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானது. இதைபற்றி எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

இப்போட்டி 1970-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம் திகதி முடிவடையும்.

பிரவேசப் பத்திரம்
பெயர்: ..............................
விலாசம்: ..............................
வியாபாரியின்
பெயர்: ..............................
விலாசம்: ..............................




ZENITH


கலாச்சாரத்திற்கு இடம் கொடுக்க முன்வந்துள்ள இவ்வேளையில்சிங்கள - தமிழ் கலாச்சாரங்களை இருசாராரும் நேரில் பார்த்து அறியக் கூடிய வகையில் வடபகுதிக் கலைஞர்கள் தென்பகுதியில் நாடகங்கள் நடித்துக் காட்டவும் தென்பகுதி மக்கள் தமது கலைகளை வடபகுதி மக்கள் காணவும் வழிவகை செய்ய வேண்டும். நாடகக் கலை வளர்ச்சிக்கும் இது உதவும்.

அராலி புவனேந்திரன் சிறப்புரை நிகழ்த்துகையில் இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா, ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து கலைஞர்கள் தங்கள் கலைகளை இங்கு வந்து நடாத்தி எமது நாட்டிற்கும் தமது நாட்டிற்கும் கலைப்பலம் அமைத்து வரும் போது இந்நாட்டில் தமிழ்-சிங்களக் கலைப் பரிமாற்றம் ஏற்படாதது வருந்தத்தக்கதென்றார்.

கலையரங்கிற்குத் தலைமை வகித்த கலையரசு திரு. க. சொர்ணலிங்கம் பேசுகையில், இங்கு நடைபெற்ற போட்டி நாடகங்கள் மிகத் தரமாயிருந்ததாயும், இது போன்ற நாடகங்கள் அமையுமிடத்து சிறந்த நடிகர்களும் உருவாக வாய்ப்புண்டு என்றும், வெடி அரசன் போன்ற சரித்திர நாடகங்கள் அழிந்து விட்டதெனத் தாம் எண்ணியிருந்த வேளையில் இன்று அது அழியவில்லையென நிரூபிக்கப்பட்டதாவும் பழைய நாடகங்களில் பல கருத்துக்கள் கலை அம்சங்கள் அமைந்துள்ளதால் அவை இன்னும் மக்களிடையே வரவேற்பைப் பெற்றுக் கொண்டுள்ளதாயும், பொது மக்கள் நாடகக் கலைக்கு ஊக்கமளி

## பௌத்தஓவியரின் கிறீஸ்தவ சித்திரங்கள்

பண்டத்தரிப்பு, செவ்வாய்

பௌத்த ஓவியக் கலைஞரான திரு. ஹென்றி தர்மசேன கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்க முற்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் தீட்டும் சித்திரங்கள் விரைவில் கொழும்பு நகர சித்திரக் கலை மண்டபத்தில் வைக்கப்படவுள்ளன வென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் முயற்சி கிறிஸ்தவ பௌத்த நல்லுறவைப் பலப்படுத்தக் கூடியதென்று டாக்டர் ஜி.பி. மலலசேகராவும் கலாசார உயர் அதிகாரிகளும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## "புதிய தபால் நிலையம் வேண்டும்"

யாழ்ப்பாணம், புதன்

"நீர்வேலி உபதபால் நிலையத்தை பூரண தபால் நிலையமாக மாற்றவேண்டிச் சம்பந்தப்பட்ட அரசாங்க இலாகா அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் முதலானோரோடு தொடர்பு கொண்டு விரைவில் ஆவன செய்யவேண்டும்."

இப்பிரேரணை நீர்வேலி கிராம முன்னேற்றச் சங்க வருடாந்த மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

அரசகேசரிப் பிள்ளையார் கோவில் வீதியிலுள்ள கிராம முன்னேற்றச்சங்கக் கட்டிடத்தில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு திரு. க. தருமலிங்கம் தலைமை வகித்தார். சங்கத்தின் தலைவராகவிருந்தகாலஞ்சென்ற திரு. க வேகனகரத்தினம் ஜே.பி. யின் மறைவுக்கு மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: வே. சி. ஐயாத்துரை. உப-தலைவர்கள்; திருவாளர்கள் க. தருமலிங்கம், செ. நடராசா, பே. தம்பையா. காரியதரிசி திரு. க. மகாலிங்கம், உப-காரியதரிசி: திரு ச. பாலசிங்கம், பொருளாளர்: திரு. அ. அ. பாலசுப்பிரமணியம்.

## "இளைஞர்கையிலே முன்னேற்றமுள்ளது"

யாழ்ப்பாணம், புதன்

"இந்நாட்டின் முன்னேற்றம் இளைஞர்கையிலே தங்கியுள்ளது. தன்னம்பிக்கையும் விடாமுயற்சியுமே இளைஞரை முன்னேற்ற மடையச் செய்யும். காந்தியடிகள் இதைச் செயல்முறையில் காட்டினார்."

இவ்வாறு பூனகரி காரியாதிகாரி திரு. கே. கிருஷ்ணமூர்த்தி 'நவயுக இளைஞர் ஒன்றியம்' என்ற சங்கத்தை பூனகரியில் அங்குரார்ப்பணம் செய்துவைத்தபோது தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் தமிழ் காங்கிரஸ், தமிழ் அரசுக் கட்சி இளைஞர்களும் பங்கு எடுத்துக்கொண்டனர்.

புதுவருட உத்தியோகஸ்தர்களாக திரு சி. நடராசா, (தலைவர்) திருவாளர் ந. சூரியகுமாரன் இணைக் காரியதரிசி ச. நாகேஸ்வரன் பொருளாளர் திரு. பொ. விநாயகமூர்த்தி. ஆகியோர் தெரிவு செய்யப்படனர்.

குவிம


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

இன்னல்கள் நேருகின்றன. ஆனல் அவை என்றும் இருப்பதில்லை, பாலத்தின் அடியில் ஓடும் நீரைப் போல் அவை ஓடும் நீரைப்போல் அவை ஓடி மறைந்துவிடும். — சாரதாமணிதேவி.


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 41, Jaffna: Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆவணிமாதம் 17-ந் திகதி (2-9-70)


## வாலிபர் கடமை

சேகுவேரா இயக்கம் தீவிரமாகப் பரவிவருகிறது என்றும் இதை எப்படித்தடுக்கலாமென்பது பற்றியும் பொலிசாரும் அரசாங்கமும் தீவிரமாக ஆலோசனை செய்துவருவதாகச் செய்திகள் கூறுகின்றன. சேகுவேரா இயக்கம் பற்றி சில பத்திரிகைகள் திடுக்கிடும் தகவல்களையும் வெளியிடுகின்றன. இலங்கையில் இல்லாத 'நாம் தமிழர்' இயக்கம் பற்றிய பல தகவல்களை வெளியிட்ட பத்திரிகைகளே இன்று 'சேகுவேரா' பற்றியும் செய்திகளைப் பிரசுரிக்கின்றன. பொலிசார் கொடுக்கும் விபரங்களை விட இந்தப் பத்திரிகைகள் இன்னும் அதிகமான தகவல்களைத் தெரிவிக்கின்றன. இதேசமயம் சேகுவேரா இயக்கம் பற்றி அஞ்சவேண்டியதில்லையென்றும், 'நானும் ஒரு சேகுவேராதான்' என்றும் உதவி அமைச்சர் ஒருவரும் ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலரும் கூடப் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கின்றனர். சேகுவேரா இயக்கம் என்றாலும் வேறெந்த இயக்கமென்றாலும் நாட்டின் பிரச்னைகளுக்குப்பலாத்காரம் மூலம் பரிகாரம் காண முயற்சித்தால் அது ஜனநாயக வாழ்க்கை முறையைப் பின்பற்றி இரத்தம் சிந்தாமல் வாக்குரிமையினுல் அமைதிப் புரட்சி காணும் நமது நாட்டுக்கு எந்த விதத்திலும் நன்மையளிக்காது. பலாத்கார முயற்சிகளை முறியடித்து அதே சமயம் பலாத்காரம் தான் வழி வகுக்கும் என்ற மனப்பான்மைக்கு அடிப்படைக் காரணமாக அமைந்துள்ள குறைகுற்றங்களை உணர்ந்து தெளிந்து அவற்றை நீக்க முன்வர வேண்டியது அரசாங்கத்தின் கடமை மட்டுமல்ல இந்த நாட்டில் வாழும் ஒவ்வொருவரினதும் கடமையாகும் என்பதே எமது கருத்து. இதை இதற்கு முன்னரும் எடுத்துக் காட்டியிருக்கிறோம் யடைந்துள்ளனர். வேலை வாய்ப்பளிக்க முடியாத கல்வித்திட்டத்தினுல் என்ன பயன்?

கூட்டணி அரசாங்கம் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கவும், படித்த வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கவும் சில முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. முன்னைய அரசாங்கமும் இவ்வித முயற்சிகளை மேற்கொள்ளவில்லையென்று சொல்லமுடியாது.

ஆனுலும் வேலைவாய்ப்பளிப்பதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. இதுஜனநாயக அரசியல் அமைப்பு முறையினுல் ஏற்பட்ட குறைபாடுகளாகவும் இருக்கலாம்.

பட்டதாரி மாணவர்களுக்கு ஆசிரிய வேலை வழங்குவதானுலும் சரி, படித்த வேலையற்ற வாலிபர்களுக்கு பஸ் கண்டக்டர்கள் வேலை அளிப்பதானுலும் சரி ஆட்சிமன்ற உறுப்பினர்களின் சிபார்சும் கட்சிப் பிரமுகர்களின் சிபார்சும் கேட்கப்படுகிறது. ஆட்சிமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலும் கட்சி உறுப்பினர்கள் அல்லது கட்சி ஆதரவாளர்களாகவே இருக்கின்றனர். இவர்கள் சிபார்சு செய்யும் பொழுது விருப்பு வெறுப்புக்கு இடமில்லாமலிருக்குமா?

இந்த விருப்பு வெறுப்புக்களால் ஒரு சிலர் திருப்தியடைய பலர் விரக்தியடைகின்றனர் திருப்தியடைவோர் சிலராகவும் விரக்தியடைவோர் பலராகவும் அதிகரிக்கிறது.

இதன் விளைவு ஜனநாயக வாழ்க்கை முறையில் வாலிபருக்கு வெறுப்பையேற்படுத்திப் பலாத்காரத்தில் நாட்டம் கொள்ளச்செய்கிறது

வேலைவாய்ப்புப்பிரச்னையையும் இதர தேசியப் பிரச்னைகளையும் கட்சி அரசியலிலிருந்தும், அரசியல் விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்டும் தீர்வுகாண முனைந்தால் இங்கு சேகுவேரா இயக்கம் தோன்றவும் மாட்

## குமரிமுனையில் குதூகல விழா

'நீலத்திரைக்கடல் ஓரத்திலே நின்று நித்தம் தவம் செய் குமரி எல்லை' எனப் பாடினுர் புரட்சிக் கவிஞன் பாரதி. இந்தக்குமரி முனை இன்று கன்னியாகுமரி என அழைக்கப்படும், பழம் பெரும் புனித பூமி வரலாற்றுத்தொன்மையும் புகழும் கொண்டது. ஞானத்துக்குத் தமிழ் நிலமென்பர். தமிழ்நிலத்தின் தென்கோடி முனைதான் கன்னியாகுமரி. இங்கு குமரி அன்னை நின்று நித்தம்தவம்புரிகிருள், இந்த கன்னியாகுமரி அம்மனின் அருளைப்பெற்றுத்தான் சுவாமி விவேகானந்தர் உலகிற்கு அருள்புரிந்தார்.

கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறையில்தான்- விவேகானந்தர் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டிருக்கிறது. அம்மனின் அடிச்சுவடு அமைந்திருந்த காரணத்தால் பண்டைக்காலத்தில் இந்தப்பாறை ஸ்ரீபாதப் பாறை என அழைக்கப்பட்டது. ஏறக்குறைய எழுபத்தேழு ஆண்டுகளுக்கு முன் சுவாமி விவேகானந்தர் இந்திய உபகண்டம் எங்கும் பாத யாத்திரை செய்து கடைசியில் தென்கோடியில் உள்ள குமரிமுனைக்கு வந்தார். கரையில் இருந்து ஆயிரத்து அறுநூறுஅடி தூரத்தில் கடலின் நடுவே அமைந்த ஸ்ரீபாதப்பாறையை அடைந்து தியானத்தில் அமர்ந்து தேவியின் அருளைப் பெற்ருர். இதன் பின்னரே அவரின் இலட்சியப் பேரொளி பிரகாசமாயிற்று விவேகானந்தரின் பெருமையை உலகறியச்செய்தது மட்டுமன்றி, துறவறப் பெருமையை உலகறிய வைத்து தேசிய மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தியது இந்த நிகழ்ச்சி. எனவே இந்தத் தெய்வீக மாற்றத்துக்கு இடமாக அமைந்த இப்பாறைஅன்றுதொட்டு விவேகானந்தப்பாறை என வழங்கலாயிற்று. இப்பாறையானது கன்னியாகுமரி அம்மனை நோக்கியவண்ணம் இருக்கிறது இப்பாறையின்மீது கம்பீரமாக கலைக்கோயிலாக, அன்பின் அருளின் பெருமை விளங்க ஆன்ம ஈடேற்றத்துக்குக் கலங்கரை விளக்கமாக அமைந்திருக்கின்றது விவேகானந்த மணிமண்டபம்.

சுவாமியைப்பற்றிய புனித நினைவுக்கு மகத்தான ஒரு நினைவுச் சின்னம் அமைய வேண்டுமானுல் இதைவிடப் பொருத்தமானஇடம் வேறு எங்கும் அமையமுடியாது உலகஜோதியாம் விவேகானந்தரின் நினைவுச் சின்னம் ஆத்மீகத்தின் பிறப்பிடமாகிய, உறைவிடமாகிய தமிழ்நாட்டின் நுழைவாயிலாகும் குமரிமுனையில் அமைந்திருப்பது சாலவும் சிறந்ததேயாகும்.

இந்தநினைவு மண்டபம்ஒரு கோடிரூபாவுக்குமேல்செலவு செய்து அமைக்கப்பட்டிருக்கிறது இந்த விதி இந்திய உபகண்டத்தின் பலபகுதிகளிலுமிருந்துசேகரிக்கப்பட்டிருக்கிறது இப்பணியில் தமிழ்நாட்டு அரசும் முக்கிய பங்குகொண்டிருக்கிறது.

புரட்டாதித்திங்கள்இரண்டாம் நாளான இன்று இந்த நினைவு மண்டபம் இந்திய ஜனுதிபதி திரு. கிரியினுல் திறந்து வைக்கப்படுகிறது. மாநில முதல்வர்களும் துறவிகளும். அறிஞர்களும், பெரியோரும் விழாவில் பங்குபற்றுவர்.

இந்த அரும்பெரும் பணியையுலகம் வியக்க நிறைவேற்றிய விவேகானந்தர் நினைவுச் சின்னக் குழுவினருக்கு ஆத்மீக உலகம் என்றென்றும் கடமைப்பட்டதாகும்.

—உடுவில் சிவன்

## ஓட்டப்போட்டியில் முதலிடம்

சுழிபுரம், செவ்வாய்

வலிகாமம்மேற்கு விளையாட்டுக்கழகங்களின் இரண்டாவது பிரிவினரின் வருடாந்த விளையாட்டுப் போட்டியின் ஓர் அங்கமான முதியோருக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில்பொன்னுலையைச் சேர்ந்த திரு. ஜே. எம்- மயில்வாகனம் ஜே: பி. முதலிடத்தைப் பெற்றுக்கொண்டார் கடந்த மூன்று ஆண்டுக[ளா]க இவர் இப் போட்டியி[ல்] முதலிடத்தைப் பெற்று வருகின்ருர் என்பது குறிப்பிடத்தக்கது

## தெய்[வீ]க் கீதமாலை

இன்று கொடியேற்றம்

## வெருகலம் பதி முருகன் ஆலயம்

ஈழநாட்டின்பெயர்பெற்ற கந்தகோட்டங்கள் பலவற்றில் மிகவும்பழமை வாய்ந்ததாக வெருகலம்பதியில உள்ள வேலாயுதசுவாமி கோயில் விளங்குகிறது. இவ்வாலயப்பகுதியினை அண்டியிருக்கும் பல கிராமங்களும் பழமையான சைவ புனித அனுஷ்டானங்களைக்கொண்டதாகவும் சைவ ஆலயங்களுக்கு அவ்வப்பகுதி மக்கள் செய்த தொண்டினைக் கொண்ட காரணப் பெயர்களைக் கொண்டும் விளங்குகிலது. இப்பகுதிக்குத் தெற்கே வங்காள விரிகுடாவில் விழும் மகாவலிகங்கை, கொட்டியாபுரக் குடாவில் விழுந்து. வெருகல் கங்கை, குருக்கல் கங்கை என இரு பிரிவுகளாகப் பிரிந்து செல்கின்றன, வெருகல் என்னும் கங்கை இளமுருகன் எழில் காண 'அரோகரா' என்னும் சத்தத்தோடு பாய்ந்து செல்லும் பரிசுத்த தன்மையுடன் விளங்குகின்றது.

இவ்வாலயம்பற்றிய வரலாறு, தன்மை, மகிமை, சிறப்பு என்பனபற்றி 'திருக்கோணுசல வைபவம்' என்னும் நூல் மிகத் தெளிவுற எடுத்துரைக்கின்றது.

இந்தியாவில் திருநெல்வேலியிலிருந்து திருக்கோணமலையில் வந்து குடியேறிய நல்லைநாதச் செட்டியார் என்பவர் பெருங் குஷ்ட ரோகத்தினுல் அல்லலுற்ருர். கதிர்காமத்துக்குச் செல்லும் வழியிலுள்ள இவ்வெருகலம் பதியை வந்தடைந்த போது இச்செட்டியாரின் குஷ்ட நோய் மாறியதென்றும், இறைவன் தமக்கு இப்பகுதியில் கோயில் கட்டும்படி செட்டியாருக்கு அசரீரியாகக் கூறினுரென்றும் ஐதீகம்.

குஷ்ட ரோகம் நீங்கப்பெற்ற இந்நல்லைநாதச்செட்டியாரே இந்த வேலாயுத சுவாமி கோயிலைக் கட்டினுரென வரலாறுகள் கூறுகின்றன.

இவ்வாலயத்தில் வருடாவருடம் ஆவணித் திங்கள் உத்தர நட்சத்திரத்தன்று ஆரம்பமாகி 18 நாட்கள் திருவிழா நடைபெறுகிறது.

முதல் ஆறு நாட்களும் பிள்ளையாரும், ஆதிதேவரும் உள்வீதி வலம் வருவர். 7ம் நாள் சந்திக் காவல் நடைபெற்று வெளி வீதி வலம்வருவர். 9ம் நாளன்று சித்திர வேலாயுதசுவாமி கேடயத்தில்எழுந்தருளிவருவார். 18ம்நாள் வேட்டைத் திருவிழா நடைபெறும். திருவிழாக்களின்போது ஏராளமான காவடியாட்டங்கள் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

கதிர்காமத்தில் எழுந்தருளிய கந்தன், ஆடித்திங்கள் உற்சவத்தின்போது அடியார்க்கு அருளிய பின் ஆவணித் திங்கள் உற்சவத்தின் போது இக்கோவிலில் எழுந்தருளி அடியார்க்கு அருள் பாலிக்கின்ருர்.

## தனித் தமிழ்நாடு....

[1-ம்பக்கத்தொடர்ச்சி]

கள் அதன்பின் வெங்காயத்தை விற்க முடியாதஅபாய நிலை உருவாகக்கூடும் என்ருர்.

'நாம் இலங்கையர்' இயக்கத்தலைவர் கு. விநோதன் பேசுகையில்,

இன்றைய நிலையில்தமிழரசாரின் போராட்டங்களின் பின்னே செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் இது காலம்வரை அவர்கள் நடத்திய எந்தபோரா[ட்]டமாவது வெற்றி பெற[]வில்லை ஆகவேதமிழரசாரின் போராட்டங்களை விட்டு இன்றைய நிலையில் இளைஞர்கள் யாவரும் ஒன்று திரண்டு தனித்தமிழ் நாட்டுக்காக போராட வேண்டும். [] வாங்கினுல் எப்படி எம் நாட்டு எழுத்தாளர்களுக்கு ஊக்கமளிக்க முடியும். தரமற்ற புத்தகங்களை தடை செய்ய அரசு முனைந்துள்ள இந் நேரத்தில் மக்களும் அதற்கு ஆதரவு கொடுத்து தரமற்றவற்றை தடை செய்து இங்குதரமான புத்தகங்களுக்கு புத்துணர்ச்சி அளிக்க வேண்டும்.

இந்திய சினிமாவில் நம்நாட்டு இளைஞர்கள் அதிக ஆர்வம் காட்டுகின்ற[ன]ர். குறிப்பிட்ட அளவு படங்களுக்கு மட்டும் உத்தரவளித்து இருந்தும் ஒருசில படங்கள் அங்கு செல்லக் கூடிய முறையில் படஇறக்குமதி அமைய வேண்டும். இதைக் கவனிக்க திரைப்

## ஜயாறன் எழுதுவது:

தலைநகரான கொழும்பிலே தெருவில் நடந்துசென்ருலும்சரி அல்லது வீட்டுக்குள் இருந்தாலும்சரி, நமது உயிருக்கும், உடைமைக்கும் பத்திரமில்லை; நிம்மதியாக இருக்கமுடியாது என்று ஒவ்வொருவரையும் கலங்க வைத்துவிட்டது, கொழும்பு தெமட்டக்கொடையிலே நடந்துள்ள 'இரட்டைக் கொலைப் பயங்கரச் சம்பவம்.

அல்பியன் தெருவிலே, வயதான ஒரு தம்பதிகள் பல வருடங்களாக வாழ்ந்துவந்தனர். மிகவும் சாதுக்கள். அவர்களுக்கு எதிரிகளும் கிடையாது. பக்கத்தில் வசிக்கும் எல்லாருடைய மதிப்பையும் பெற்றவர்கள்.

அப்படியிருந்தும் சென்ற வாரம், ஒரு நாள் இரவு 8-30 மணிக்கு, அவர்கள் வசித்த வீட்டிலிருந்து ''அம்மோ, அம்மோ' என்று கதறிய சத்தம் கேட்டது: பக்கத்திலிருந்த ஒருவர் 'டோர்ச்' விளக்குடன் சென்று பார்த்தார். ஜன்னல் வழியே பார்த்தபோது மனைவி மிஸிஸ் பெரேரா தலையிலிருந்து இரத்தம் சொட்ட ஒரு பெஞ்சு மீது படுத்திருந்தார். மிஸ்டர் பெரேரா இரத்த வெள்ளத்தில் கீழே கிடந்தார்.

வீடு பூட்டியிருந்ததால், பக்கத்திலுள்ள போலிஸ் ஸ்டேஷனுக்குச் சென்று அவர் தகவல் தெரிவித்தார் சிறிது நேரம் கழித்துப் போலிஸார் வந்தனர். வீட்டின் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்று பார்த்தபோது. பெரேரா இறந்துகிடந்தார். அவரது மனைவியார் [55 வயது] மண்டை உடைந்து பிரக்ஞை இல்லாமலிருந்தார். பின்னர் ஆஸ்பத்திரியில் அவரும் இறந்துவிட்டார்.

இவர்களை இப்படிக் கொன்றது யார்? ஏன் கொன்ருர்கள்? எப்படி வீட்டுக்குள் வந்தார்கள்? எந்த வழியால் வெளியே சென்ருர்கள்? என்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லுவார் இல்லை.

''ஒரு பாவமும் அறியாது, அமைதியாக வாழ்ந்துவந்த இத்தம்பதிகள், தலைநகரிலே மக்கள் அதிகம் வாழும் ஒரு பகுதியில், சமீபத்தில், ஒரு பெரிய போலிஸ் ஸ்டேஷனும் உள்ள இடத்தில் [] லாம், அப்படிக் கண்டுபிடித்துத் தண்டிக்கப்பட்டாலும் இறந்தவர்கள் திரும்பி உயிர் பெற்று வரமுடியுமா? மனிதனின் மனதில் தான் எவ்வளவு கொடுமை! இந்த ஆபத்துக்களை எல்லாம் பார்க்கையில், இதற்கெல்லாம் தப்பி, உயிர் வாழ முடிவதுதான் வியப்பல்லவா?

தெய்வம் காப்பாற்றுவதாயின் காட்டில் தனியாக விட்டாலும், ஒருவர் பத்திரமாக இருக்கலாம். தெய்வம் காக்காவிடில், வீட்டுக்குள் வைத்து எவ்வித பாதுகாப்புகளைச் செய்தாலும் அவர் வாழமுடியாதென்ற சுலோகம் தான் ஞாபகம் வருகிறது.

0 0 0

யாழ்ப்பாணத்தில் பிறந்து, கல்வி கற்று, மலாயாவிலே தலைமை ஆசிரியராகக் கடமையாற்றி, குடும்பப் பொறுப்புகள் எல்லாம் முடிந்து, பென்ஷன் பெற்ற ஒரன்பர் புதுச்சேரி அரவிந்த ஆசிரமத்தில் பல மாதங்கள் தங்கியிருந்து இப்போது இலங்கை வந்திருக்கிருர். அவர் ஒரு மாதறதில் மீண்டும் புதுச்சேரிக்குத் திரும்பி விடுவாராம். அவர் பெயர் மயில்வாகனம்.

புதுச்சேரி ஆசிரமத்துக்குப் பக்கத்திலே மகான் அரவிந்தரின் ஞாபகமாக ஸ்தாபிக்க இருக்கும் 'அரோவில்' எனும் சர்வதேச நகரின் அமைப்பு, நோக்கம் முதலியவை பற்றிப் பல விவரங்களை அவர் வாலிப உற்சாகத்துடன் விளக்கினுர். குறுகிய சாதி, சமய வேற்றுமைகள் அற்று, மனிதர் எல்லாம் ஒரு குடும்பம் போல் தெய்வீக யோக வாழ்வு வாழக் கூடிய முறையிலே அப் புதிய நகர வாழ்வு இருக்குமாம். கடற்கரைக்குப் பக்கமாக பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இதற்காக வாங்கி விட்டதாகவும், இன்னும் நிலங்கள் வாங்கப் படுவதாகவும், நிம்மதியாக தூய வாழ்வு வாழ விரும்புபவர்களுக்கு இது நல்ல சந்தர்ப்பம் என்ருர். அந்த விவரமெல்லாம் கேட்டதும், அங்கு போய் ஒரு வீடு கட்டிக் கொண்டு அமைதியாக வாழ வேண்டும் போல் பலருக்கும் இருக்கும். உலகின் பல நாடுகளிலிருந்தும் பலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியது அரசாங்கத்தின் கடமை மட்டுமல்ல இந்த நாட்டில் வாழும் ஒவ்வொருவரினதும் கடமையாகும் என்பதே எமது கருத்து. இதை இதற்கு முன்னரும் எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

நமது நாடு அரசியல் சுதந்திரம் பெற்று இருபத்திரெண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. ஆயினும் இன்னும் பொருளாதார விடுதலை பெறமுடியவில்லை. கல்வித் திட்டத்தை நமது நாட்டுக்கேற்ற முறையில் மாற்றியமைக்க கல்வி அமைச்சராகப்பொறுப்பேற்ற ஒவ்வொருவரும் முயற்சி செய்வதாகக் கூறிவந்திருக்கிறார்களேயொழிய செயலில் எதுவும் நடைபெற்றதாகச் சொல்வதற்கில்லை.

படித்த வாலிபர்கள் பலர் வேலையில்லாது அலைகின்றனர். வேலையின்மை காரணமாக அவர்கள் விரக்தியும் இந்த தேசியப் பிரச்னைகளையும் கட்சி அரசியலிலிருந்தும், அரசியல் விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்டும் தீர்வுகாண முனைந்தால் இந்த கேடுவோ இயக்கம் தோன்றவும் மாட்டாது; அது பற்றி அஞ்ச வேண்டிய அவசியமும் இருக்காது.

இதே சமயம் அரசியல்வாதிகள் தமது தேர்தல் வெற்றிக்காகவும் தமது சொந்த நலனுக்காகவும் இளைஞர்களை கட்சி அரசியலுக்குள் ஈடுபடுத்துவதற்கும் அவர்கள் மூலம் 'ஏதோ கிடைக்கும்' என்ற நம்பிக்கையுடன் கட்சி அரசியல் சேற்றில் இளைஞர்கள் கால் வைப்பதற்கும் இரு தரப்பினரும் தாமாகவே முற்றுப்புள்ளி வைத்தால் அரசியல்வாதிகளுக்கும் தலையிடி குறையும், இளைஞர்களுக்கும் நிம்மதி.

## பல்கலைக்கழகத்தில் கணக்கியல் தமிழில் நடத்த நடவடிக்கை

### தூதுக் குழுவிடம் அமைச்சர் தகவல்

பருத்தித்துறை,செவ்வாய்

'வர்த்தகக் கல்வியின் வளர்ந்துவரும் முக்கியத்துவத்தைக் கல்வியமைச்சு உணர்ந்து வருகிறது. வருகால சமுதாயத்திற்கு வர்த்தகக் கல்வியறிவு இருந்தால் மட்டுமே நாடு வளம்பெற முடியும். எமது இக் கருத்தைச் செயற்படுத்தும் முதல் படியாக, அடுத்தாண்டு தொடக்கம் பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இப்பொழுதிலும் பார்க்கக் கூடுதலான மாணவரைத் தெரிவு செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்வேன்'.

இவ்வாறு நேற்று முன்தினம் அகில இலங்கை வர்த்தக கலாமன்ற ஆதரவின்கீழ் தம்மைப் பேட்டி கண்ட மேற்படி சங்கச்செயலாளர் திருவாளர் மா. புவனேந்திரன், கே.சபாநடேசன் ஆகியோரிடம் கல்வி அமைச்சர் திரு. அல்ஹாஜ்பதியுதீன் மகமூத் கூறியுள்ளதாகத் தெரிகிறது.

இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் தமிழில் வர்த்தகக் கலைகள் போதிப்பதற்கான முயற்சிகளைத் தாம் மேற்கொள்ளுவதாகவும், பல்கலைக்கழகப் புதுமுகக் கட்டத்தில் கணக்கியலை ஒரு பாடமாக்க விருப்பதாகவும் அமைச்சர் இவர்களிடம் தெரிவித்தாராம்.

......

[illegible] அன்பின் அருளின் பெருமை விளங்க ஆன்ம ஈடேற்றத்துக்குக் கலங்கரை விளக்கமாக அமைந்திருக்கின்றது விவேகானந்த மணிமண்ட

---

ஆசிரியருக்கு கடிதம்

## நடந்தது இதுதான்

28-8-70 'ஈழநாடு' இதழில் 4ம் பக்கத்தில் தென்மராட்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாச ஊழியர் திரு. ச. நா. ஜெயதாஸ் என்பவரை மீண்டும் வேலை வழங்க ஏற்பாடு செய்ததற்காக உள்நாட்டு வர்த்தக அமைச்சருக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கைதடிக் கிளை நன்றிதெரிவிக்கும் பிரேரணை நிறைவேற்றியுள்ளதாகச் செய்தி வெளியாகியிருந்தது. சுதந்திரக்கட்சிக் கிளை நன்றிப் பிரேரணை நிறைவேற்றியதில் சமாசத்திற்கு ஆட்சேபனையில்லை. திரு. ச. நா. ஜெயதாஸின் தற்காலிக வேலைநீக்க காலத்தில் மந்திரியோ கூட்டுறவு இலாகாவே, தொழில் இலாகாவோ சமாசத்திற்கு எது விதமான கட்டுப்பாடோ, கட்டளையோ இடவில்லை. 24-8-70 அன்று சமாசத்தில் விசாரணை ஆரம்பமான போது திரு. ச நா ஜெயதாஸ் சமாசக் குற்றச்சாட்டை ஏற்று மன்னிப்பு அளிக்குமாறு கடிதம் எழுதியதை விசாரணைச் சபையார் நீண்டநேரப் பரிசீலனையின் பின் 1-9-70 தொடக்கம் ஆறு மாதகாலத்திற்குத் தகுதிகாண் காலமாகக் கணித்து நியமனம் செய்திருக்கிறார்களென்பதைத் தெரிவிக்கிறேன்

இ. வேலாயுதர்
காரியதரிசி

கைதடி

போட்டியில் முதலிடத்தைப் பெற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது

---

## தெய்வக் கீதமாலை இன்று வெளியீடு

யாழ்ப்பாணம், புதன்

சங்கீதபூஷணம் அ-கி- ஏரம்பமூர்த்தி எழுதிய தெய்வக்கீதமாலை இன்று மாலை மீசாலை தெற்கு கரும்பி மாவடிக் கந்தசுவாமி கோவிலில் நடைபெறவிருக்கிறது. சங்கீதபூஷணம் எஸ்- விநாசித்தம்பி, சிறப்புரை நிகழ்த்துவார் வித்துவான் வே- ஆறுமுகம்பிள்ளை முதற்பிரதியை வாங்குவார் செல்வி தெய்வநாயகி கிருஷ்ணசாமி பாடல்கள் இசைப்பார் பண்டிதர்கள் சி-காசிப்பயா, செ- சிவலிங்கம், ஏ- பரஞ்சோதி. திரு- சி- சிவஞானசுந்தரம் ஆகியோர் பாராட்டுரைகள் வழங்குவர்

... ...

## இன்று பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்

குருநகரில் புதிய ஜே-பி-யாக நியமிக்கப்பட்டுள்ள பிரபல தொழிலதிபரும் சமூகசேவையாளருமான திரு- பி- எஸ்- சின்னத்துரைக்கு அப்பகுதிப் பொதுமக்களால் இன்று மாலை முன்னாள் எம்- பி- திரு- அல்பிரட் துரையப்பா தலைமையில் பாராட்டுவிழச நடைபெறவிருக்கிறது.

---

## திருமண அழைப்பு

### ஆர். குலத்துங்கசுந்தரம் — ஸ்ரீ ரஞ்சனி

தெல்லிப்பளை திரு. ஆர். குலத்துங்கசிங்கத்தின் சகோதரரும் (காலஞ்சென்ற ஸ்ரீரங்கநாதனின் புத்திரன்) ஆர். குலத்துங்கசுந்தரம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், சீனன்வாடி அவர்களுக்கும், டாக்டர் வி. பாலசிங்கம் தம்பதிகளின் (221, நாவலர் ரோட், யாழ்ப்பாணம்) புத்திரி ஸ்ரீ ரஞ்சனிக்கும் 5-9-70 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் வண்ணை பெருமாள் கோவிலில் திருமணம் நிகழும் உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். 2914

வியாபாரம்பெருக

விளம்பரம் செய்க

[illegible] வில்லை ஆகவே தமிழரசாரின் போராட்டங்களை விட்டு இன்றைய நிலையில் இளைஞர்கள் யாவரும் ஒன்று திரண்டு தனித்தமிழ் நாட்டுக்காக போராட வேண்டும். இதற்கு தயாராக விட்டால் சிங்கள மக்களுடன் இணைய வேண்டிய அபாய நிலை உருவாகும். ஆகவே இளைஞர்கள் யாவரும் ஒன்றிணைந்து சுபிட்சமடைய சுதந்திரவாழ்வை அமைக்கதனித் தமிழ் நாட்டுக்காகப் போராட முன்வாருங்கள்.

இந்திய பத்திரிகைகளை தடைசெய்யும் பிரச்னை இன்று தலை தூக்கியுள்ளது. இந்தியாவிலிருந்துவரும் தரமற்ற புத்தகங்களை நாம் [illegible] படங்களுக்கு மட்டும் உத்தரவளித்து இருந்தும் ஒருசில படங்கள் அங்கு செல்லக் கூடிய முறையில் படஇறக்குமதி அமைய வேண்டும். இதைக் கவனிக்க திரைப்பட கூட்டுத்தாபனம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றார்.

மேற்படி சனசமூக நிலைய புதிய கட்டிடத்தை மயிலிட்டி கிராமசபை தலைவர் திரு. குதி இராசதுரை திறந்து வைத்தார்.

இக் கூட்டத்தில் திரு எஸ் சண்முகவடிவேல், வ கிருஷ்ணசாமி சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நவரத்தினராசா உட்பட பலர் உரையாற்றினர்.

---

## சங்க நிர்வாகிகள்

உடுப்பிட்டி, செவ்.

வட இலங்கை நூலகர்சங்கத்தின் புதிய நிர்வாகிகள் வருமாறு:-

தலைவர் டாக்டர் திரு: எஸ் தம்பையா, (வட்டுக்கோட்டை யாழ் கல்லூரி நூலகர்) காரியதரிசி திரு. எஸ். மாணிக்கவாசகர்(யாழ் மத்திய கல்லூரி) வெளியீட்டாளர் திரு. வீ, ஈ. பாக்கியநாதன் பலாலி கனிஷ்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்.)

செயற்கமிட்டி உறுப்பினர்கள் திரு. எஸ். கணேசானந்தம் (மன்னார்) செல்வி எஸ், செல்லையா (யாழ்ப்பாணம்( செல்வி எச், ஹன்டி (சென்ஜோன்ஸ் கல்லூரி) திரு, எஸ். மகேந்திரன் (இந்துக்கல்லூரி கொக்குவில்) செல்வி எஸ், குமாரசாமி செல்வி எஸ். பாலசுப்பிரமணியம்.

### கம்யூ. வாலிபர் சங்கம்

வதிரி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. கே, இராஜ் தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:-

தலைவர் திரு. க. வ. அமிர்தலிங்கம், செயலாளர் திரு, ஆர், ஸ்ரீகாந்தன், உபசெயலாளர் திரு. எஸ், மகேந்திரன், பொருளாளர் திரு, ஏ, முருகதாஸ்,

ஐந்துபேரடங்கிய நிர்வாக சபையொன்றும்தெரிவுசெய்யப்பட்டது.

### ஜாதிகுரு சங்கக் கிளை

ஸ்ரீலங்கா ஜாதிகுருசங்க வடமராட்சிக் கிளையின் கூட்டம் திரு. வி. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நெல்லியடி மத்தியமகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

ஜாதிகுருசங்கவடமராட்சிக்கிளை நிர்வாகிகள் விபரம் வருமாறு:-

தலைவர் திரு. எம். பி. செல்வரத்தினம், உபதலைவர்கள் திரு. ஏ. இராஜரத்தினம், திரு சேவற்கொடியோன், காரியதரிசி திரு, மு. கந்தப்பு, உபகாரியதரிசி திரு. பொ. தம்பு தனாதிகாரி திரு. எஸ் தாமோதரம்பிள்ளை.

### அச்சுத்தொழிலாளர் சங்கம்

யாழ்ப்பாணம் புதன்

வடமாகாண அச்சுத்தொழிலாளர் சங்கஉத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. எஸ். நடராசா உபதலைவர் திரு. எம். பாலசிங்கம் காரியதரிசி திரு. எஸ். விஜயானந்தன் உபகாரியதரிசி திரு. கே ஈ. இலங்கைநாயகம் பொருளாளர் திரு. ஐ. குலநாயகம்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக திரு. வி. பாக்கியநாதன் கே. கந்தசாமி எஸ். அன்ரனி எஸ் நவரட்ணம் ஏ. இம்மானுவல் என். கணபதிப்பிள்ளை எஸ். விசாகப்பெருமாள் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

### 3 மாதத்தில் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்துள்ள வாக்குறுதிகளையும் மறந்துவிடப்போவதில்லை என்று பிரதம மந்திரி சொன்னார். மக்கள் பெரிதாக எதிர்பார்க்கிறார்கள் நாங்கள் ஏராளமான வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறோம். இந்த வாக்குறுதிகள் யாவற்றையும் மூன்று

அமைதியாக வாழ்ந்துவந்த இத்தம்பதிகள், தலைநகரிலே மக்கள் அதிகம் வாழும் ஒரு பகுதியில், சமீபத்தில், ஒரு பெரிய போலிஸ் ஸ்டேஷனும் உள்ள இடத்தில் காட்டுமிராண்டித் தனமாக இப்படிக் கொலைசெய்யப்பட்டிருப்பதை நம்புவதும் கடினம். இந்தப் பாதகம் செய்தவர்களைக் கண்டுபிடிப்பதில் போலிஸாருக்கு ஏதும் உதவிசெய்யவேண்டும்என்று கேட்டுக் கொள்கின்றேன்'' என்று மரண விசாரணை அதிகாரி பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஊர் நிலைமை எவ்வளவு கெட்டிருக்கிறது என்பதற்கு இந்தப் படுபாதகம் ஓர் உதாரணம், போலிஸ் நாய்களும் மோப்பம் பார்த்துக் கண்டுபிடிக்க முடியாமல் அந்த வீடெல்லாம் மிளகாய்ப் பொடியைத் தூவியிருந்தார்களாம், கொலை பாதகர்கள் இந்தக் கொலையின் ரகசியத்தைக் கண்டுபிடித்து, உண்மையான குற்றவாளிகளைப் போலிஸார் கைதுசெய்ய முடியுமா என்பது மிகவும் சந்தேகம்.

பொதுமக்களின் உதவியிருப்பின், சீக்கிரத்தில் உண்மை வெளியாகி, குற்றவாளிகளைப் பிடித்துவிட

விவரமெல்லாம் கேட்டதும், அங்கு போய் ஒரு வீடு கட்டிக் கொண்டு அமைதியாக வாழ வேண்டும் போல் பலருக்கும் இருக்கும். உலகின் பல நாடுகளிலிருந்தும் பலர் அங்கு வந்து வசிக்க ஆவலுடன் இருக்கிறார்களாம். பலர் வீட்டுக்காக நிலம் வாங்கியுள்ளதாகத் தெரிவித்தார் அன்பர்.

புதுச்சேரி அரவிந்த ஆசிரமமும் ''அரோவில்'' என்ற சர்வதேச நகரமும் தமிழகத்திலே அமைவது தமிழகத்தின் பெருமையை உலகில் உயர்த்துவதாகவுள்ளது. புதுச்சேரி ஆசிரம வாழ்க்கை விவரங்களையும் அங்குள்ள அன்னையின் பெருமையையும்பற்றி மயில்வாகனம் அவர்கள் பலருசியான விவரங்களையும் தெரிவிக்கின்றார் 'ஈழநாட்'டிலே பயனுள்ள இவ் விவரங்கள் வெளிவரக் காத்துள்ளன.

0 0 0

பெருகலாம் தவம்
பேதமை தீரலாம்
திருகலாகிய சிந்தை
திருத்தலாம்
பருகலாம் பரமாய
தோரானந்தம்
மருகலானடி வாழ்த்தி
வணங்கவே.

—அப்பர்

---

## ஒவ்வொரு குடும்பத்துக்கும் நோய் விபரப்புத்தகம்

கோட்டை, செவ்வாய்

அரசாங்க மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறும் பொதுமக்கள் தங்களின் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரது நோய் பற்றியும் பதிந்து வைத்துக் கொள்வதற்கான 'குடும்பநோய் புத்தகங்களை' விநியோகிப்பது சம்பந்தமாக சுகாதார அமைச்சு ஆராய்ந்து வருவதாகத் தெரிகின்றது.

குடும்பங்களின் தலைவர்களின் பெயரில் அரிசிப் புத்தகம் விநியோகிப்பதுபோல் இன்று குடும்பநோய்ப் புத்தகங்களும் வழங்கப்படும் என்று தெரிகின்றது.

ஒவ்வொரு குடும்பத்திலும் நிலவும் நோய்கள் பற்றியும் அந் நோய்களுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் பற்றியும் இந்தப் புத்தகங்களில் விபரமாகப் பதிந்து வைக்கப்படும் இந்தப்புத்தகங்கள் ஒரு குடும்பத்துக்கு இரண்டுவீதம் கொடுக்கப்படும் ஒன்று குடும்பத்தலைவர்கள் தங்கள் வீடுகளில் வைத்துக்கொள்ளவும் மற்றப் பகுதி மருத்துவ அதிகாரி காரியாலயத்தில் பத்திரப்படுத்தி வைக்க ஏற்பாடு செய்யப்படும்.

மக்கள் சுகாதாரக்கல்வி தேசியக் கமிட்டி இதற்கான சிபாரிசுகளைச் செய்துள்ளது இந்தக் கமிட்டிக்கு சுகாதார உதவி அமைச்சர் திருமதி சிவா ஒபயசேகரா தலைவராகவிருக்கிறார்.

---

### ரூ, 6 லட்சம் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புணர்ச்சி எப்போதோ ஏற்பட்டுவிட்டபோதிலும் புதிய அரசாங்கத்தின் ஊக்கத்தால் ஈழத்து இலக்கிய உலகில் புதிய சகாப்தம் ஏற்பட்டுள்ளது' எனத் தலைவர் தமதுரையில் தெரிவித்தார். 'தெணியான்' பேசுகையில் தமிழக சஞ்சிகைகள் ஆபாசத்தையே வளர்க்கின்றன நல்ல இலக்கியத்தைப் படிக்கும் நிலையைக் கொண்டுவரவேண்டியது இலக்கிய அன்பர்களின் கடமையாகும் தமிழகம் தாய் நாடு ஈழம் சேய் நாடு என்னும் அரசியல் தலைவர்களின்கருத்துத்தான் எமது பின்தங்கியநிலைக்குக் காரணம்' எனச்சொன்னார்.

---

மாதங்களில் நிறைவேற்றுவது இயலாது.


# இன்று திறப்புவிழா



# முருகன் ஆபரண மஹால்

நேரம்: காலை 9.00 மணி

நங்கையர் விரும்பும் நவநாகரீக முறையில்
தங்க நகைகள் தயாரித்து அளிப்பவர்கள்
இன்றே வருகை தாருங்கள்.



முருகன் ஆபரண மஹால்

கே. கே. எஸ். வீதி, — சுன்னாகம்.


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org